




## 1

> **ஏ**ழைகளை உழைப்பு குணப்படுத்துகிறது;
> பணக்காரர்களை டாக்டர் குணப்படுத்துகிறார்.

**சு**பத்ரா ஆர்க்கிமெடீஸ் தத்துவத்தை 'சிரத்தையாய் - அந்த ஒன்பதாம் வகுப்பு மாணவிகளுக்கு விளக்கிக் கொண்டிருந்த போது வகுப்பின் வாசலில் பள்ளிக்கூட அட்டெண்டர் தன்ராஜ் வந்து நின்றான்.

''அம்மா...''

கரும்பலகையிலிருந்து திரும்பினாள்.

''என்ன தன்ராஜ்...?''

''கரஸ்பாண்டெண்ட் உங்களைக் கூப்பிட்டாரம்மா.''

''வர்றேன்... போ...'' - சொன்னவள் கையிலிருந்த சாக்பீஸ் பவுடரைத் தட்டிக்கொண்டே கூப்பிட்டாள்.

''ராஜலட்சுமி...''

''டீச்சர்...''

தாவணி போட்ட குண்டுப்பெண் ஒருத்தி எழுந்து நின்றாள்.

''க்ளாஸை பார்த்துக்க. நான் திரும்பி வர்றவரைக்கும் 'கப்சிப்'ன்னு இருக்கணும்... எவளாவது பேசினா போர்டுல பேர் எழுதி வை.''

''சரிங்க டீச்சர்...''

சுபத்ரா வகுப்பறையை விட்டு வெளியே

வந்தாள். மத்தியான வெய்யில் சிமெண்ட் தரை வராந்தாவில் பளீரென்று விழுந்து கண்களைக் கூச வைத்தது. மனசுக்குள் யோசனை அலைந்தது.

'கரஸ்பாண்டெண்ட் எதற்காக கூப்பிட்டிருப்பார்?'

'வரப்போகிற பள்ளி ஆண்டு விழாவை எப்படி நடத்தலாம்ன்னு ஏதாவது யோசனை கேட்பாரோ...?'

ப்ரேயர் மைதானத்தில் இறங்கி நடந்தாள். பாதி மைதானத்திற்கு வந்திருந்தபோது எதிரே ஃபிஸிகல் இன்ஸ்ட்ரக்டராய் அதே பள்ளியில் பணிபுரியும் கணேஷ் எதிர்பட்டான்.

''என்ன மிஸ் சுபத்ரா... உங்களுக்கு க்ளாஸ் இல்லையா?''

''இருக்கு, நைன்த் ஏ!''

''பின்னே...?''

''என்னை... கரஸ்பாண்டெண்ட் கூப்பிட்டாராம்...''

''அப்படீன்னா புதுசா ஏதாவது ஒரு பொறுப்பை உங்கக்கிட்டே ஒப்படைக்கப் போறார்னு... அர்த்தம்...''

''நானும் அப்படித்தான் நினைக்கிறேன்...'' சொல்லிக் கொண்டே நகர முயன்ற சுபத்ராவை ''ஒரு நிமிஷம்'' என்று கூறி நிறுத்தினான் கணேஷ். அடர்த்தியான கேசம் காற்றில் பறக்க களையாய் தெரிந்த அவனுடைய முகத்தை ஏறிட்டாள்.

''என்ன...?''

''நாளைக்கு காலையில பதினோரு மணிக்கு பள்ளிக் கூட அட்ரஸுக்கு



உங்களுக்கொரு தபால் வரும். ரொம்பவும் முக்கியமான தபால்.''

''யார்கிட்டயிருந்து...?''

''நாளைக்கு லெட்டரை பிரிங்க... தெரியும்'' சொல்லிய படியே அவன் புன்னகையோடு எதிர் திசையில் நடக்க - சுபத்ரா குழப்பமாக நடந்தாள். கொஞ்ச நாளாகவே கணேஷின் பார்வையில் வித்தியாசம் தெரிகிறது. பார்க்கும் போதெல்லாம் புன்னகைத்துக்கொண்டு ரெண்டு வார்த்தையாவது பேசாமல் அவன் போவதில்லை. நாளைக்கு வரப்போகிற லெட்டர் நிச்சயமாய் கணேஷோட லெட்டராகத்தான் இருக்கும்.

கரஸ்பாண்டெட் அறைக்கு வெளியே கார் நின்றிருக்க - அவர் உள்ளே யாரையோ சத்தம் போட்டுக் கொண்டிருந்தார். ஜன்னலை நெருங்கியபோதுதான் அது லைப்ரேரியன் என்று தெரிந்தது.

கரெஸ்பாண்டெண்ட் சண்முகராஜனின் குரல் சற்று கோபத்தோடு கலந்து கேட்டது.

''ஏன்யா... இது பள்ளிக்கூடம்ன்னு நினைச்சியா...? உன் வீடுன்னு நினைச்சியா? நான் வர்றது கூடத் தெரியாமே அப்படி என்னய்யா தூக்கம்...?''

''ஸாரி ஸார்...''

''தப்பை பண்ணிட வேண்டியது, ஸாரி; வேஷ்டின்னு சொல்லிட வேண்டியது. ஏன்யா... உனக்கு இங்கே எத்தனை சம்பளம்...?''

''தொள்ளாயிரத்து பத்து...''

''மாசம் பொறந்த அன்னிக்கே இருபது

பைசா ரெவின்யூ ஸ்டாம்ப் மேல கையெழுத்தை போட்டு ஒன்பது நூறு ரூபாய் நோட்டையும் ஒரு பத்து ரூபாய் நோட்டையும் முள்ளங்கி பத்தையாட்டம் வாங்கறியா இல்லையா...?''

''.....''

''சொல்லய்யா... வாயைத் தொறந்து! வாங்கறியா? இல்லையா?''

''வாங்கறேன்...''

''வாங்கற அதுக்கு தகுந்தமாதிரி வேலை பார்க்கணுமா இல்லையா?''

''பார்க்கணும் ஸார்...''

''போய்ப்பாரு... இனி ஒரு தடவை நீ லைப்ரரியில் தூங்கறதைப் பார்த்தேன்... டெர்மினேஷன் ஆர்டர் அடுத்த நிமிடமே உன்னோட கைக்கு வந்துடும்.''

''இனிமே இப்படி நடக்காது ஸார்...''

''போ... போய் வேலையைப் பாரு...''

லைப்ரேரியன் கறுத்துப்போன முகத்தோடு வெளியே வர - சுபத்ரா உள்ளே போனாள்.

''வ... வணக்கம் ஸார்.''

''வாம்மா சுபத்ரா... க்ளாஸ்ல இருந்தியா?''

''ஆமா ஸார்...''

''உட்காரு...''

''பரவாயில்ல ஸார்!''

''அட! உக்காரம்மா...''

நுனி நாற்காலியில் - உட்கார்ந்தாள் சுபத்ரா. ஆதாரத்துக்கு மேஜை நுனியை பற்றிக் கொண்டாள்.

''அப்பா எப்படியிருக்கார்?''



''நல்லாயிருக்கார் ஸார்...''

''வாத்தியார் உத்யோகத்திலிருந்து ரிடையரானதுமே, நாலைஞ்சு கடைகளுக்கு அக்கௌண்ட் எழுதப் போறதா சொல்லிட்டிருந்தாரே...?''

''அப்பாவுக்கு கடந்த ரெண்டு மாசமாகவே ஐ சைட் சரியில்லை ஸார்... எங்கேயும் போகாமே வீட்லதான் இருக்கார்.''

''தங்கச்சி கலாவதி ஒழுங்கா காலேஜுக்கு போயிட்டிருக்காளா...?''

''போயிட்டிருக்கா ஸார்.''

''பி.எஸ்.ஸி. ரெண்டாவது வருஷம்தானே படிக்கிறா...?''

''ஆமா ஸார்''

''தம்பி பசுபதிக்கு வேலை ஏதாவது கிடைச்சுதா...?''

''இல்ல ஸார்''

''யூ.பி.எஸ்.ஸி. ரிட்டன் எக்ஸாமும், வோரல் எக்ஸாமும் பாஸ் பண்ணியிருக்கான். இன்னுமா வேலை கிடைக்கலை...?''

''எங்க ஃபேமிலிக்கு நேரம் சரியில்லை ஸார்...''

''உண்மையிலேயே உங்க ஃபேமிலிக்கு நேரம் சரியில்லை தாம்மா... இல்லேன்னா உன்னை வேலையிலிருந்து டெர்மினேட் பண்ணச் சொல்லி டி.ஈ.ஓ. ஆபீஸிலிருந்து எனக்கு இன்ஸ்ட்ரக்ஷன் வந்திருக்குமா என்ன...?''

சுபத்ரா அதிர்ச்சியில் உறைந்தாள்.

''ஸ... ஸார்... நீங்க என்ன சொ...ல்றீங்க...?''

''நான் சொல்றதுக்கு என்னம்மா இருக்கு... டி.ஈ.ஓ. ஆபீஸிலிருந்து வந்திருக்கிற

லெட்டரை பாரு...''

பேப்பர் வெயிட்டுக்கு கீழே ஃபேன் காற்றில் படபடத்துக் கொண்டிருந்த அரசாங்க சாணி கலர் பேப்பரை எடுத்து நீட்டினார். சுபத்ரா அதைக் கை நடுங்க வாங்கிப் பார்த்தாள். தமிழில் டைப் அடித்த வாசகங்கள் தெரிந்தன.

**மாவட்ட கல்வி அதிகாரி அலுவலகம். ஆணைக்குறிப்பு எண் 51/715ன் படி வேடப்பட்டி சரகத்தில் உள்ள சண்முகராஜன் உயர்நிலைப் பள்ளியில் பணிபுரியும் குமாரி சுபத்ரா 10 பிரிவின் கீழ் வேலை பார்த்து வந்தார். அவர் பணி நிரந்தரமாக்கப்படுவதற்குரிய ஆணை - முதன்மை கல்வி அதிகாரி அவர்களிடமிருந்து வராததால் - வரும் 31-ம் தேதியன்று அவர் பள்ளிப் பணிகளிலிருந்து விடுவிக்கப்பட வேண்டுமென்று - அறிவுறுத்தப்படுகிறது. கையொப்பம். மாவட்ட கல்வி அதிகாரி, ஆணை நகல்: கரஸ்பாண்டெண்ட், சண்முகராஜன் உயர்நிலைப்பள்ளி - வேடபட்டி.**

படித்து முடித்ததும் கண்களில் நீரோடு நிமிர்ந்தாள் சுபத்ரா. ''ஸ... ஸார்...! நான் இதை எதிர் பார்க்கலை...''

''நானுந்தாம்மா... உன்னை எப்படியும் பர்மனென்ட் பண்ணிடுவாங்கன்னு நினைச்சேன்...''

''இ... இப்ப என்ன ஸார் பண்றது...?''

''டி.ஈ.ஓ. ஆர்டரை நான் மதிச்சுதான் ஆகணும். வேணும்ன்னா நீ ஒரு காரியம்



பண்ணலாம்...''

''சொல்லுங்க ஸார்...''

''டி.ஈ.ஓ.வும் ஒரு பொண்ணுதான்... புருஷனை இழந்தது. நல்ல டைப்ன்னு சொல்றாங்க... பர்சனலா அவளைப் போய் பாரம்மா... உன்னோட குடும்ப நிலைமையைச் சொல்லு... அந்த அம்மா ஏதாவது மாற்று ஏற்பாட்டை பண்ணினாலும் பண்ணுவா... நானும் ஒரு லெட்டர் தர்றேன். கொண்டு போய் கொடு...''

தலையாட்டிக்கொண்டே எழுந்தாள் சுபத்ரா. இருதயத்துக்குள் ஒரு டன் இரும்பின் கனம் ஏறிக்கொண்ட மாதிரியான உணர்வு.

''பயப்படாம க்ளாஸுக்கு போம்மா...''

சுபத்ரா குரல் தழுதழுத்தாள். ''பயப்படாமே எப்படி ஸார் இருக்கிறது... ரிடையரான அப்பா... படிக்கிற தங்கச்சி... வேலைக்காக அலையற தம்பி... வீட்டுச் செலவுக்கு காசு இல்லைன்னா பரிதாபமா என் முகத்தைப் பார்க்கிற அம்மா - இவங்களையெல்லாம் வயிறு காயாமே வெச்சிருந்ததே இந்த வேலைதான்... இதுக்கும் ஆபத்துன்னா... நான் குடும்பத்தை எப்படி ஸார் நடத்தறது...? அப்பாவுக்கு வர்ற பென்ஷன் பணம் வாரம் பத்து நாளைக்குக்கூட காணாதே...''

''தைரியத்தை இழக்காமே அந்த 'டி.ஈ.ஓ'வைப் போய் பாரும்மா. பொண்ணுக்கு பொண்ணு இறங்கலாம்...''

கரஸ்பாண்டெண்டுக்கு கை குவித்துவிட்டு அழுகை சீறும் கண்களோடு வெளியே வந்தாள் சுபத்ரா.

உலகம் இப்போது இருட்டாய் இருப்பது போன்ற பிரமை. வேப்பமரக் கிளையில் உட்கார்ந்து கொண்டிருக்கிற காகமும் - அவளை சோகமாய் பார்ப்பது போன்ற உணர்வு.

தளர்ந்த நடையோடு ப்ரேயர் மைதானத்தில் நடந்து - வராந்தா படி ஏறியபோது பள்ளி ஆபீஸ் க்ளார்க் ஆறுமுகம் - ஜன்னலில் கையசைத்து கூப்பிட்டார்.

''மிஸ் சுபத்ரா உங்களுக்கு ஃபோன்...''

'ஃபோனா?'

'இது யாரிடமிருந்து?'

வேகமாய் போய் ஆபீஸுக்குள் நுழைந்தாள். க்ளார்க் சொன்னார். ''லைன்ல உங்க ப்ரதர்தான் இருக்கார். பேசுங்க...''

ரிஸீவரை எடுத்தாள் சுபத்ரா.

''ஹலோ...''

''அக்கா! நான் பசுபதி பேச்றேன்...''

''என்னடா...?''

''அப்பா திடீர்னு மயக்கம் போட்டு விழுந்துட்டார் - ஜீ.பி.ஹாஸ்பிட்டல்ல சேர்த்திருக்கோம்.''

சுபத்ரா பதறினாள்.

''அப்பாவுக்கு என்னடா...?''

''டாக்டர் இதுவரைக்கும் ஒண்ணுமே சொல்லலை... அம்மா வேற அழுதுட்டிருக்கா. எனக்கு என்ன பண்றதுன்னே தெரியலை... நீ உடனே புறப்பட்டு வாக்கா.''

''இப்ப வர்றேன்...''

ரிஸீவரை வைத்துவிட்டு - ஓட்டமும்



நடையுமாய் வெளிப்பட்டாள் சுபத்ரா. இருதயத்தில் வளைகுடா போர் ஒன்று ஆரம்பமாகியிருந்தது.

## 2

**அன்பான - அடக்கமான மனைவி வாய்க்கப்பெற்றவர்கள், இந்த பூவுலகிலேயே சொர்க்கத்தை அனுபவிக்கிறார்கள்.**

''அப்பா...!''

நைட்கவுனை தரித்து - அதன் முடிச்சை இறுக்கிக் கொண்டிருந்த ஈஸ்வரமூர்த்தி திரும்பினார். அறை வாசலில் மகன் கௌதம்.

''வாங்க ஸார்...'' (நல்ல மூடில் இருக்கும் போது மகனை அவர் 'ஸார்' என்று தான் கூப்பிடுவார்.)

கௌதம் உள்ளே வந்தான். வெள்ளைநிற பேகிசர்ட்டில் - ALWAYS WITH YOU - என்று நீலநிற எம்ப்ராய்டரி எழுத்துக்கள் மின்னின.

''என்ன ஸார்...?''

''நாளைக்கு மத்தியானம் ஒரு நாலு மணிக்கு நீங்க ஃப்ரீயா இருப்பீங்களாப்பா...?''

''ஆமாப்பா.''

''என்கூட வர முடியுமா?''

''எங்கே...?''

''எனக்கு பெண் பார்க்க...''

''ஈஸிட்...?'' என்றவர் புன்னகைத்தார்.

''பொண்ணு யாரு ஸார்...?''

''பெண்ணுக்கு இதே ஊர்தான். பேரு கலாவதி.''

''குடும்பம்...?''

''பெண்ணுக்கு அப்பா வாத்தியாரா இருந்து ரிடையரானவர். பேரு சிவசாமி. அவர்க்கு ரெண்டு பெண். ஒரு பையன். மூத்த பெண் சுபத்ரா டீச்சர் வேலைக்கு போயிட்டிருக்கா... பையன் படிச்சுட்டு வேலைக்காக அலைஞ்சுட்டிருக்கான்...''

''அப்படீன்னா நாம பாக்கப் போறது ரெண்டாவது பெண்ணை?''

''ஆமாப்பா.''

''மூத்தவளுக்கு கல்யாணத்தை எங்கே முடிச்சிருக்காங்க...?''

''அந்த பெண்ணுக்கு இன்னும் கல்யாணம் ஆகலை...''

''மூத்தவளுக்கு இன்னும் கல்யாணம் ஆகலையா...? அப்படீன்னா... ரெண்டாவது பெண்ணை எப்படி தருவாங்க...?''

''அக்காகாரி கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு சொல்லிட்டாளாம். அதான்.''

''என்ன காரணம்...?''

''தெரியலை...''

''ஸார்க்கு கலாவதியை எப்படி பழக்கம்...?''

''லைப்ரரியில் அடிக்கடி பார்த்துக்குவோம்...''

''போட்டோ இருக்கா...?''

கைக்குள் மறைவாய் வைத்திருந்த போட்டோவை அப்பாவிடம் நீட்டினான் கௌதம்.

''போட்டோவை ஸார் கையில்தான்



வெச்சிருக்காரா...?'' சிரித்துக் கொண்டே போட்டோவை வாங்கிப் பார்த்தார். சில விநாடிகள் கழித்து பார்வையை உயர்த்தினார்.

''பொண்ணு மா நிறமோ?...''

''கொஞ்சம்...''

''ஸார்க்கு எத்தனை மாசமா இந்த காதல்...?''

''ஆறு மாசமா...''

''தப்புத்தண்டா ஏதும் நடந்திடலையே...?''

''இல்லேப்பா...''

''சரி... நாளைக்கு பெண் பார்க்கப் போவோம்...''

## 3

**படுக்கைக்கு போகும்போது கவலைகளை மிதியடியிலேயே விட்டுவிட வேண்டும்.**

டாக்டர் சுபத்ராவிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

''இதோ பாரம்மா... உங்கப்பாவுக்கு உடம்புல பெரிய வியாதி எதுவுமேயில்லை. கண்பார்வையில் தான்... கொஞ்சம் தொந்தரவு. கண் திடீர்ன்னு இருட்டி விடறதுனால... இது மாதிரியான மயக்கம் வரும்... இன்னும் ரெண்டு மாசத்துக்குள்ளே அவர்க்கு ஒரு ஆப்ரேஷனை பண்ணியாகணும்... இல்லேன்னா... பார்வை படிப்படியா குறைஞ்சு போய்... ஒரு நாளைக்கு அவர் நிரந்தரமா இருட்டுல உட்கார்ந்துக்க வேண்டியதுதான்...''

''டாக்டர்...''

''பயப்பட வேண்டியதில்லைம்மா... ஐ ஸ்பெஷலிஸ்ட் ஆல்பர்ட் இந்த மாதிரியான ஆப்ரேஷனை செய்யறதில் கெட்டிக்காரர். ஒருமணி நேரத்துல ஆப்ரேஷன் முடிஞ்சுடும்...''

''ப... பணம் எவ்வளவு செலவாகும் டாக்டர்...?''

''ஏழாயிரம் ரூபாய் வரைக்கும் ஆகும்... ஆப்ரேஷனை எந்த தேதியில் வெச்சுக்கலாம்னு நீ சொன்னா... நான் டாக்டர்கிட்டே பேசி ஏற்பாடு பண்றேன். ஒருமணிநேரம் கழிச்சு... உங்கப்பாவை... வீட்டுக்கு கூட்டிட்டு போயிடலாம்... அவர் ரெஸ்ட்ல இருக்கிறதுதான் ரொம்ப முக்கியம். வெளியே எங்கேயும் அனுப்பக் கூடாது.''

சுபத்ரா கனமான மனசோடு தலையாட்டி விட்டு டாக்டரின் அறையினின்றும் வெளிப்பட்டாள்.

பெஞ்சில் உட்கார்ந்திருந்த அம்மாக்காரி ராஜமும், கலாவதியும், பசுபதியும் அவளைப் பார்த்ததும் ஸ்லோ மோஷனில் எழுந்தார்கள்.

''டாக்டர் என்ன சொன்னாரக்கா...?'' பசுபதி கேட்டான்.

சுபத்ரா உஷ்ணமாய் பெருமூச்சு விட்டாள்.

''அப்பாவுக்கு ஒரு ஆபரேஷன் பண்ணணுமாம்... கண்ல நடக்கிற இந்த ஆபரேஷனுக்கு ஏழாயிரம் ரூபாய் வரைக்கும் செலவாகுமாம்...''

மூன்று பேரும் மலைத்தார்கள்.

''ஏ... ஏழாயிரமா...?''



ராஜம் அங்கேயே சேலைத் தலைப்பால் வாயைப் பொத்திக் கொண்டு அழ ஆரம்பித்தாள். ''இ... இவ்வளவு பணத்துக்கு எ... எங்கேடி போ... போறது...?''

''ஏதாவது ஏற்பாடு பண்ணித்தான் ஆகணும்...''

''எப்படிடி... பண்ண முடியும்...? இருந்த பத்து பவுன் நகை பேங்க்குக்கு போயாச்சு... இந்த வருஷமும் வட்டி கட்டலன்னா... அந்த நகை மூழ்கியே போயிடும்... நீ கொண்டு வர்ற சம்பளத்துல நிம்மதியா சாப்பிட்டுகிட்டு இருக்கோம். அவ்வளவுதான்... வெளியே கடன் கேட்டா... நம்மளை நம்பி யார் தருவாங்க...?''

கலாவதி அவளுடைய தோளைத் தொட்டாள்.

''அக்கா...''

''ம்...''

''ஸ்கூல் டீச்சர்ஸ்கிட்டே பணம் கேட்டுப் பாரேன்...''

உதட்டைப் பிதுக்கி கசப்புச் சிரிப்பு சிரித்தாள் சுபத்ரா. ''இருபதாம் தேதிக்கு மேலே... அஞ்சுக்கும் பத்துக்கும்... கைமாத்து வாங்க அலையற அவங்க கிட்டே ஏழாயிரத்தை கேட்டுட்டு போக முடியுமா...''

''கரஸ்பாண்டெண்ட் கிட்டே கேட்டா...?''

மூன்று பேரையும் பார்த்தாள் சுபத்ரா.

'டீச்சர் வேலையிலிருந்து... இந்த மாதம் முப்பத்தியோராம் தேதி என்னை கழட்டிவிடப் போகிற விஷயம் தெரியாமல் இவர்கள் பேசிக்

கொண்டிருக்கிறார்கள்.'

'கல்லிலிருந்து நார் கூட உரித்திடலாம்... கரஸ்பாண்டெண்ட்சண்முகராஜனிடமிருந்து செல்லாத ஒரு நயாபைசாவைக் கூட வாங்க முடியாதுன்னு இவர்களுக்குத் தெரியாது.'

''கரஸ்பாண்டெண்ட்கிட்டே பணத்தை எதிர்பார்க்க முடியாது... வேற எதையாவது பண்ணித்தான் ஆகணும்... நாம பணத்துக்கு ஏற்பாடு பண்ற விஷயம் அப்பாவுக்கு தெரிய வேண்டாம்... ஆபரேஷன் பண்ண வேண்டிய அவசியம் இருக்கிறதும் அவர்க்கு தெரிய வேண்டாம்.''

எல்லோரும் தலைகளை ஆட்டினார்கள்.

## 4

**கூடிதம் பாதி சந்திப்புக்குச் சமம்.**

மறுநாள் காலை பத்து மணி.

பஸ்ஸைப் பிடித்து டவுன் ஹாலில் இறங்கிக்கொண்ட சுபத்திரா மாவட்ட கல்வி அதிகாரி அலுவலகத்தை அடைந்தபோது டி.ஈ.ஓ. அம்மாள் ஜீப்பினின்றும் இறங்கி உள்ளே போவது தெரிந்தது. வராந்தா நாற்காலிகளில் நான்கைந்து பேர் காத்திருந்தார்கள். அறைவாசலில் நின்றிருந்த ப்யூன் சுபத்ராவை ஏறிட்டான்.

''என்னம்மா...? யாரை பார்க்கணும்...?''



''டி.ஈ.ஓ. அம்மாவை...''

''அப்படி போய் உட்காருங்க... இவங்க பார்த்துட்டு வந்ததும் நீங்க போகலாம்...''

போய் உட்கார்ந்தாள்.

பக்கத்து பெஞ்சில் உட்கார்ந்திருந்த இரண்டு ஆசாமிகள் லஜ்ஜையில்லாமல் அவளை திரும்பிப் பார்த்துவிட்டு பேசிக் கொண்டார்கள்.

''நல்லாயிருக்கா... இல்லை...?''

''செம கட்டை...''

''கிராமம் போலிருக்கு... அதான் உடம்பு திம்சு கட்டை மாதிரி பார்க்கிறவங்க மூச்சை நிறுத்துது...''

''கழுத்துல பட்டா தொங்குதா பாரு...?''

''பார்த்துட்டேன்... இல்லை...''

''பட்டணத்துக்காரிகளுக்கு இது மாதிரி...''

ப்யூன் குறுக்கிட்டான்.

''ஸார்... நீங்க உள்ளே போங்க... அம்மா பெல் குடுத்துட்டாங்க.''

இருவரும் எழுந்து உள்ளே போனார்கள். சுபத்ரா அவர்களுடைய பேச்சால் பாதிக்கப்படாத மாதிரி உட்கார்ந்திருந்தாள். இந்த கமெண்ட்ஸெல்லாம் அவளுக்கு பழகிப் போனவை. கல்லூரியில் படித்த காலத்திலிருந்தே கேட்டு கேட்டு புளித்துப் போனவை. ஒரு பெண் அழகாய் இருந்தால் எல்லா ஆண்களின் கண்ணோட்டமும் ஒரே மாதிரியாய்தான் இருக்கிறது. கூச்சமில்லாமல் பார்க்கிறார்கள். எப்படி வேண்டுமானாலும் பேசுகிறார்கள்.

ப்யூன் பக்கத்தில் வந்து இளித்தான்.

''என்னம்மா...? ட்ரான்ஸ்பரா?''

''இல்லை...''

''பின்னே...?''

''டெர்மினேஷன்...''

''அடேடே... எந்த ஸ்கூலு...?''

''வேடப்பட்டி சண்முகராஜன் ஹைஸ்கூல்...''

''எத்தனை வருஷம் சர்வீஸ்...?''

''ரெண்டு வருஷம்.''

''என்னம்மா... இது... ரெண்டு வருஷம் சர்வீஸை பண்ணிட்டு டெர்மினேஷன் ஆர்டரைக் கையில் வாங்கலாமா...? உத்யோகத்துல நீங்க ஈஸியா பர்மனெண்ட் ஆகணும்ன்னா... ஒரு வழி இருக்கு...''

''என்ன...?''

''எஜுகேஷன் மினிஸ்ட்டர்க்கு வேண்டிய ஒருத்தர் டிபார்ட்மெண்ட்ல இருக்கார். அவர்கிட்டே உங்க விவகாரம் போனா... ஒரே நாள்லே முடிஞ்சுடும்...''

''நிஜமாவா...?''

''முடிச்சுத் தர நானாச்சு...''

''அவரு யாரு...?''

''பேரெல்லாம் வெளியே தெரிய வேண்டாம்... அவர்க்குத் தர வேண்டியதை என் மூலமா குடுங்க. காரியம் முடிஞ்சுடும்...''

''அ... அவர்க்கு என்ன தரணும்...?''

''என்னம்மா புரியாத மாதிரி கேக்கறீங்க...? டிபார்ட்மெண்ட்ல இருக்கிற ஆள் என்ன எதிர்பார்ப்பார்...? பணம் தான்...!''

''எ... வ்... வ... ள... வு?''



''உங்க வேலை பர்மனெண்ட் ஆகணும். அவ்வளவு தானே...?''

''ஆமா...''

''அப்படீன்னா இருபதாயிரம்...''

சுபத்ரா சுவாசிக்க மறந்து போனாள். ''எ... என்னது...? இருபதாயிரமா...?''

''ஆமாம்மா... இன்னிக்கு நிலவர ரேட் அதுதான்...''

உள்ளே போனவர்கள் வெளியே வர - அடுத்த பெஞ்சில் காத்திருந்த மற்ற இரண்டு பேர் உள்ளே போனார்கள். ப்யூன் கிசுகிசுப்பாய் தொடர்ந்தான்.

''என்னம்மா... சொல்றீங்க...?''

''அவ்வளவு பணம் என்னால குடுக்க முடியாது...''

''சரி... எவ்வளவு குடுப்பீங்க...?''

''என்னால ஒரு நூறு ரூபாய் கூட குடுக்க முடியாது...''

ப்யூன் அவளை ஒரு புழுவைப் பார்ப்பது போல் - பார்த்துவிட்டு நகர்ந்தான். உதடுகள் தன்னிச்சையாய் முனகியது. ''ஆளைப் பார்த்தா... ஷோக்கா இருக்கா. தட்டிப் பார்த்தா தகர டப்பா. காலங்கார்த்தால தேறாத கேஸு...''

சுபத்ராவின் பார்வை எதிர்ப்புற சுவரில் ஒட்டப்பட்டிருந்த அரசுத்துறை சுவரொட்டிக்கு போயிற்று.

**கடின உழைப்புக்கு ஈடு இணை எதுவுமே இல்லை.**

**பாரதம் நமது தாயகம். அதன் வளர்ச்சியில் பெருமை கொள்வோம்.**

நெஞ்சு உயர்த்தி பெருமிதம் கொள்வோம்.

டி.ஈ.ஒ. அறைக்குள் மணியடிக்கும் சத்தம் கேட்டது. ப்யூன் வேண்டா வெறுப்பாய் உள்ளே போகும்படி சைகை காட்டினான்.

சுபத்ரா எழுந்து உள்ளே போனாள்.

தள்ளுகதவு பின்பக்கம் சாத்திக் கொள்ள, கொண்டை போட்டு நீலநிற கதர்ச் சேலையில் இருந்த அந்த அம்மாவைப் பார்த்து கும்பிட்டாள்.

''வணக்கம்...''

அந்த அம்மாள் நிமிர்ந்தாள். கண்களுக்கு கொடுத்திருந்த கண்ணாடியைக் கழற்றி மேஜையின் மேல் வைத்த படி எதிரில் இருந்த நாற்காலியைக் காட்டினாள்.

''உட்காரம்மா...''

சுபத்ரா உட்கார்ந்தாள்.

''சொல்லு...''

சுபத்ரா கையில் வைத்திருந்த ஃபைலை பிரித்து - டெர்மினேஷன் ஆர்டரை எடுத்து நீட்டினாள். அந்த அம்மா வாங்கி பார்த்துவிட்டு புன்னகையோடு நிமிர்ந்தாள்.

''நா... என்ன பண்ணனும்...?''

''இந்த டெர்மினேஷன் ஆர்டரை கேன்ஸல் பண்ணி... பழையபடி அதே ஸ்கூல்ல எனக்கு போஸ்டிங்கை போடணும்...''

''அது எப்படியம்மா முடியும்...? டென் ஏ ஒன்ல நீ வேலை பார்த்திட்டிருக்கே... எப்ப வேணும்ன்னாலும் உன்னை டெர்மினேட் பண்ண எஜுகேஷன் போர்டுக்கு அதிகாரம் உண்டு.''



''மேடம்... என்னோட குடும்பம் ஹெல்ப் லெஸ்ஸா இருக்கு. என்னோட ஸேலரி வந்தாத்தான் வீட்ல அடுப்பு புகையும். என்னோட ஃபாதர் ஒரு ரிடையர்ட் டீச்சர்... எனக்கு கீழே ஒரு ஸிஸ்டர், ஒரு ப்ரதர்...''

டி.ஈ.ஒ. கையமர்த்தினாள்... ''நாட்டுல இருக்கிற பாதி பேர் இன்னைக்கு உன்னோட ஸ்டேட்டஸில் தான் இருக்காங்க... அதுக்காக எல்லார்க்கும் வேலையைக் குடுத்துட முடியுமா...?''

''மேடம்! நீங்க மனசு வெச்சா...?''

''நான் மனசு வெச்சாலும் இந்த டெர்மினேஷன் ஆர்டரை கேன்ஸல் பண்ண முடியாதும்மா... எனக்கு மேலே சி.ஈ.ஒ. இருக்கார். அவரோட டிசிஷன்தான் அதுல முக்கியம்... வேணும்னா நீ அவரைப் போய் பாரு...''

''மேடம்! அவர் இதைச் செய்வாரா...?''

டி.ஈ.ஒ. நாற்காலிக்கு சாய்ந்து கொண்டே கேட்டாள்.

''உனக்கு இந்த ஊர்ல பெரிய ஆளுங்க யாரையாவது தெரியுமா...?''

''தெ... தெரியாது...''

''எம்.எல்.ஏ...? எம்.பி...?''

''யாரையும் தெரியாது...''

''உன்னோட ஸ்கூல் கரஸ்பாண்டெண்ட் சண்முகராஜன்தானே?''

''ஆமா...''

''அவர்க்கும் இந்த தொகுதி எம்.பி.க்கும் க்ளோஸ் ஃப்ரண்ட்ஷிப் இருக்குன்னு கேள்விப்பட்டிருக்கேன்... அவர் மூலமா நீ ஏன்

முயற்சி பண்ணக் கூடாது?"

"ஸ்கூல் கரஸ்பாண்டெண்ட் ரொம்பவும் கண்டிப்பானவர். அவர் இந்த உதவியை பண்ணுவார்ன்னு எனக்கு தோணலை மேடம்..."

"கேட்டுப் பார்ப்பதில் தப்பில்லைம்மா... உனக்கு போஸ்டிங் மறுபடியும் ஆகணும்ன்னா... அந்த எம்.பி.யைப் பிடிக்கறதைத் தவிர வேற வழியில்லை...! போய் முயற்சி பண்ணிப் பாரம்மா..."

மேஜையின் மேலிருந்த கண்ணாடியை மறுபடியும் எடுத்து டி.ஈ.ஓ. அணிந்து கொள்ள - சுபத்ரா எழுந்தாள்.

5

**எலி பூனையை பரிகாசம் செய்யும் போதெல்லாம் அது ஒரு வலைக்குள் இருக்கும்.**

சுபத்ரா பள்ளிக்கூடம் போய் சேர்ந்தபோது - பன்னிரண்டு மணி.

ஆபீஸ் அறைக்குள் நுழைந்தபோது - க்ளார்க் ஒரு தபால் கவரை நீட்டினார். "மிஸ் சுபத்ரா! திஸ் ஈஸ் ஃபார் யுவர்ஸ்..."

தபால் கவரை வாங்கியபோது - நேற்று மத்தியானம் ஃபிஸிகல் இன்ஸ்ட்ரக்டர் கணேஷ் சொன்ன வாசகம் ஞாபகத்திற்கு வந்தது.



"நாளைக்கு காலையிலே பதினொரு மணிக்கு பள்ளிக் கூட அட்ரஸுக்கு உங்களுக்கு தபால் வரும். ரொம்பவும் முக்கியமான தபால்."

'அந்த தபால்தானா அது...?'

வராந்தாவில் நடந்து கொண்டே கவரின் வாயை உடைத்து உள்ளேயிருந்த கடிதத்தை உருவினாள். நான்காய் மடித்திருந்த அந்தக் கடிதத்தை பிரித்தாள்.

அன்புள்ள மிஸ். சுபத்ரா!

நான் கணேஷ். நேரில் உங்களைப் பார்க்கும் போதெல்லாம் சொல்ல நினைத்த விஷயத்தை இந்த கடிதத்தில் தெரியப்படுத்தியிருக்கிறேன். போன பதினைந்து நாட்களுக்கு முன்னால் என்னுடைய அண்ணன் என்னைப் பார்ப்பதற்காக பள்ளிக்கூடத்திற்கு வந்தார். வேப்ப மரத்தடியில் நின்று நானும் அவரும் பேசிக் கொண்டிருந்தபோது - டீச்சர்ஸ் ரூமிலிருந்து வெளிப்பட்ட உங்களைப் பார்த்தார். நீங்கள் யார் என்பதை விசாரித்தார். நானும் உங்களைப் பற்றியும் உங்கள் குடும்பத்தைப் பற்றியும் சொன்னேன். அவர்க்கு உங்களை ரொம்பவும் பிடித்துப் போயிற்று. கல்யாணம் செய்வதை தள்ளிப் போட்டுக் கொண்டே - நாட்களைக் கடத்திக் கொண்டிருந்த அவர் - இப்போது கல்யாணம் செய்து கொள்ள தீர்மானித்து விட்டார். என்னுடைய அண்ணனுக்கு பாங்க் ஒன்றில் - நாலாயிரம் ரூபாய் சம்பளத்தில் நல்ல

**உத்தியோகம். அண்ணன் அமைதியான டைப். உங்களுக்கு இந்த கல்யாணத்தில் விருப்பம் என்றால் - அண்ணன் அப்பா, அம்மாவோடு உங்கள் வீட்டுக்கு வந்து பெண் கேட்பார். உங்கள் பதில் என்ன...? வீட்டில் கலந்து பேசி - எனக்கொரு நல்ல பதிலைக் கொடுங்கள். நான் அண்ணனுக்கு விவரம் தெரிவிக்க வேண்டும். நான் கடிதம் எழுதியது தவறாக இருந்தால் மன்னிக்கவும் - இப்படிக்கு கணேஷ்.**

கடிதத்தை வானிடி பேக்கிற்குள் பத்திரப்படுத்திக் கொண்டு மைதானத்தில் இறங்கி நடந்து - எதிர்புறத்தில் இருந்த கரஸ்பாண்டெண்ட்டின் அறைக்குள் நுழைந்தாள். இளநீரை ஸ்ட்ராவில் உறிஞ்சிக் கொண்டிருந்தவர் - சுபத்ராவைப் பார்த்ததும் மலர்ந்தார்.

''வாம்மா சுபத்ரா... எளநி சாப்ட்றியா...?''

''வேண்டாம் ஸார்...''

''என்ன... டி.ஈ.ஓ. அம்மாவைப் போய் பார்த்தியா?''

''பார்த்தேன் ஸார்.''

''என்ன சொன்னாங்க...?''

''டெர்மினேஷன் ஆர்டரை கான்ஸல் பண்ற அதிகாரம் சி.ஈ.ஓ... வுக்குத் தான் உண்டாம்...''

''சரி...''

''நம்ம தொகுதி எம்.பி., 'சி.ஈ.ஓ.' கிட்டே ஒரு வார்த்தை சொன்னா போதுமாம்...''

''அப்படீன்னு யார் சொன்னா...?''

''டி.ஈ.ஓ. அம்மா...''

ஷண்முகராஜன் நுனி மூக்கை நிரடினார்.



''எம்.பி. எனக்கு வேண்டிய ஆள்தான். எம்.பி. சொன்னா சி.ஈ.ஓ. கேட்பாராமா...?''

''ஆமா ஸார்...''

சாப்பிட்டுக் கொண்டிருந்த இளநீரை ஓரமாய் வைத்து விட்டு டெலிபோனை பக்கத்தில் இழுத்துக் கொண்டு - ரிஸீவரை எடுத்தார்.

''ஆள் இங்கே இருக்காரா... டெல்லியில் இருக்காரான்னு... பார்க்கணும்...''

டயலைச் சுழற்றிவிட்டு பேசினார்.

''எம்.பி. வீடா...?''

''.....''

''அம்மா... நமஸ்காரம்... நான் ஷண்முகராஜன் பேசறேன். எம்.பி. வீட்ல இருக்காரா...?''

''.....''

''டெல்லி போயிருக்காரா...? எப்ப வருவார்?''

''.....''

''நாளைக்கு காலையிலே வந்துடுவாரா...? சந்தோஷம். நான் நாளைக்கு காலையில் போன் பண்றேன்...''

''.....''

''முக்கியமான விஷயம் தான்... நாளைக்கு நானே அவர் கிட்டே பேசிக்கிறேன்மா...''

ஷண்முகராஜன் ரிஸீவரை வைத்துவிட்டு எதிரில் நின்ற சுபத்ராவை ஏறிட்டார்.

''எம்.பி. டெல்லியில் இருக்காராம்... நாளைக்கு வர்றாராம்...''

''ஸ... ஸார்...?''

''நான் போன் பண்ணி பேசிடறேம்மா... கவலைப் படாம போய் க்ளாஸ் எடு...''

''தாங்ஸ் ஸார்...''

''அப்பாவுக்கு ஏதோ உடம் சரியில்லைன்னு கேள்விப் பட்டேன் உண்மையாம்மா?''

''ஆமா ஸார்... நேற்று சாயந்தரம் திடீர்ன்னு மயக்கம் போட்டு விழுந்துட்டார் ஹாஸ்பிட்டல்ல அட்மிட் பண்ணியிருந் தோம்... டாக்டர் ட்ரீட்மெண்ட் எடுத்துட்டு ரெண்டு மணி நேரத்துல போகச் சொல்லிவிட்டார்.''

''காம்ப்ளிகேஷனா எதுவும் இல்லையே...?''

''இல்லை ஸார்...''

''உங்கப்பா நல்ல மனுஷன்... ரொம்ப நாளைக்கு இருக்கணும்.''

சுபத்ரா சண்முகராஜனிடம் விடை பெற்றுக் கொண்டு - மறுபடியும் மைதானத்தில் இறங்கி நடந்தாள். மறுபக்க வராந்தாவை அடைந்து - லாபரட்டரியைத் தாண்டும் போது கணேஷ் எதிர்ப்பட்டான்.

''உங்களுக்காகத்தான் காத்திட்டிருக் கேன்...''

''லெட்டர் கிடைச்சது...''

''நீங்க... படிச்சதையும் பார்த்தேன்''

''இப்படியொரு லெட்டரை உங்ககிட்டயிருந்து நான் எதிர்பார்க்கலை.''

''உங்க முடிவு என்னாங்கிறதை நான் தெரிஞ்சுக்கலாமா?''

''என்னைக் கல்யாணம் பண்ணிக்க உங்க



பிரதர்க்கு ரொம்ப ஆர்வமா?''

''ரொம்ப... ரொம்ப...''

''அப்படீன்னா... ரெண்டு வருஷமாவது அவர் காத்திருக்கணும்.''

''ரெண்டு வருஷம் காத்திருக்கணுமா... எதுக்கு...?''

''என்னோட தங்கச்சி கலாவதி படிப்பு இன்னும் ஒரு வருஷம் இருக்கு. படிப்பு முடிஞ்சதும் அவளுக்கு ஒரு நல்ல இடத்துல கல்யாணத்தை முடிக்கணும். அதுக்குள்ளே என் தம்பிக்கும் ஒரு வேலை கிடைக்கணும். குடும்பத்தில் இருக்கிற சில சுமைகளை இறக்கி வெச்ச பின்னாடிதான் எனக்கு கல்யாணம்...''

''என்னங்க இது அநியாயமா இருக்கு...?''

''உங்க சைடிலிருந்து பார்க்கும்போது - இது அநியாயம்தான்...! ஆனா அத்தனை பொறுப்புகளையும் தட்டிக் கழிச்சுட்டு - என் கழுத்துக்கு நான் தாலியை வாங்கிக்கிட்டா அதைவிட சுயநலமான காரியம் வேற எதுவும்... இருக்காது...''

''நீங்க கல்யாணம் பண்ணிக்கிறது சுயநலமா?''

''என்னோட ஃபேமிலி இப்ப இருக்கிற நிலைமையில் நான் ஒரு கவளம் சாப்பாடு அதிகமா சாப்பிட்டாலும் அது சுயநலம்தான்.''

''அண்ணன் ரெண்டு வருஷமெல்லாம் காத்திட்டிருக்க மாட்டாரே?''

''அப்படீன்னா வேற பொண்ணை பார்க்க வேண்டியது தான்.''

சொல்லிவிட்டு நகர முயன்ற சுபத்ராவை

கையமர்த்தினான் கணேஷ்.

"எங்க அண்ணன் மாதிரி ஒரு மாப்பிள்ளை உங்களுக்கு கிடைக்க மாட்டார்."

"ஸாரி! ரெண்டு வருஷத்துக்கப்புறம்தான்... நான் என்னுடைய கல்யாணத்தைப் பத்தியே நினைச்சுப் பார்க்க முடியும்..."

"வீட்டுக்குப்போய் அப்பா அம்மா கூட கலந்து பேசிட்டு நாளைக்கு உங்க முடிவைச் சொன்னா போதும்..."

"இந்த கல்யாணம் பண்ணிக்கப் போகிற விஷயத்தில் என்னோட முடிவே இறுதியானது. உங்க அண்ணனுக்கு வேற இடத்துல பெண் பார்க்கிறது நல்லது. நான் வரட்டுமா... க்ளாஸுக்கு நேரமாச்சு..."

## 6

**பொய்கள் காகங்களைப் போல் கரையும் போது - சத்தியம் ஆழ்கடலைப் போல் மௌனம் சாதிக்கும்.**

சுபத்ரா பள்ளி முடிந்து வீடு திரும்பிய போது - வாசலில் அந்தக் கார் நின்றிருப்பதைப் பார்த்து நெற்றியில் வியப்பை ஏற்றிக் கொண்டே உள்ளே போனாள்.

முற்றத்தில் தம்பி பசுபதி எதிர்ப்பட்டான். சுபத்ரா மெல்லிய குரலில் கேட்டாள்.

"யார்ரா வந்திருக்காங்க...?"



"யாரோ ஈஸ்வரமூர்த்தியாம். தன் பையனுக்கு கலாவதியைப் பெண் பார்க்க வந்திருக்கார்."

"மாப்பிள்ளையும் வந்திருக்காரா...?"

"ஆமா..."

உள்ளே போனாள் சுபத்ரா. அவளைப் பார்த்ததுமே சிவசாமி ஈஸ்வரமூர்த்தியிடம் சொன்னார். "இவதான் என் பெரிய பொண்ணு. சண்முகராஜன் ஹைஸ்கூல்ல பி.டி. அஸிஸ்டெண்டா இருக்கா."

"வணக்கம்" - என்று கைகளைக் குவித்துவிட்டு வேகவேகமாய் தன்னுடைய அறைக்குள் போய் சுபத்ரா நுழைந்து கொள்ள பின்னாலேயே அம்மாக்காரி ராஜம் வந்தாள்.

"சுபத்ரா! வந்திருக்கிறவங்க..."

"தெரியும். கலாவதியை பெண் பார்க்க வந்திருக்காங்க."

"அதுமட்டுமில்லை... கலாவதியும் அந்த பையனும் ஒருத்தரையொருத்தர் விரும்பிட்டிருக்காங்களாம்."

"கலாவதி எங்கே...?"

"சமையல் ரூம்ல இருக்கா..."

"வந்திருக்கிறவங்ககிட்டே என்ன பதிலைச் சொல்லியிருக்கீங்க...?"

"ஒரு பதிலும் சொல்லலை. அப்பாதான் சூசகமா ஒரு வார்த்தை சொன்னார்."

"என்ன...?"

"பெரிய பொண்ணு இருக்கும்போது சின்னப் பொண்ணுக்கு கல்யாணத்தைப் பண்ற வழக்கம் எங்களுக்கு இல்லைன்னு சொல்லிட்டார்."

''ஏன் அப்படிச் சொன்னார்...? வந்தவங்க நல்ல குடும்பமா தெரிஞ்சா... சரின்னு தலையை ஆட்டிட வேண்டியதுதானே? அந்த பையனும் கலாவதியும் ஒருத்தரை யொருத்தர் விரும்பறப்போ... கல்யாணத்தை முடிச்சுடறதுதான் நல்லது.''

''பெரியவ... நீ இருக்கும் போது எ... எப்படி?''

''சரி...! எனக்கு கல்யாணத்தை பண்ணி வைக்கிறீங்களா? வையுங்க. தாலியைக் கழுத்துல மாட்டிக்கிட்டு ஒருத்தன் பின்னாடி நான் போயிடறேன். நீங்க எல்லாரும் வயித்துல ஈரத்துணியை கட்டிக்கிட்டு சுவர்க்கு சாய்ஞ்சு உட்கார்ந்துக்கோங்க.''

''கத்தாதேடி! அவங்க காதுல விழுந்துடப் போவுது.''

''உன்னையும் அப்பாவையும் விட்டா இந்த கல்யாணத்தை பேசி முடிவு பண்ண மாட்டீங்க. நானே அவங்ககூட பேசறேன்.'' சேலைத் தலைப்பை சரியாய் இழுத்துவிட்டுக் கொண்டு கண்ணாடியில் முகம் பார்த்து பொட்டை சரி செய்து கொண்டபடி நகர்ந்த வளை ராஜம் மறித்தாள்.

''சுபத்ரா! கல்யாணம்ங்கிறது சாதாரண விஷயமில்லை. நாம இப்ப இருக்கிற நிலை மையில் ஒரு கல்யாணத்தை நடத்தறதப்பத்தி யோசனை பண்ணிக்கூட பார்க்க முடியாது.''

''வந்திருக்கிறவங்க கிட்டே நம்ம குடும்ப நிலைமையை பட்டவர்த்தனமா சொல்லிட வேண்டியதுதான். அதிகமா எதிர்பார்க்கிற மாதிரி தெரிஞ்சா ஒரு கும்பிடைப் போட்டு அனுப்பிட வேண்டியதுதான்.''



சொன்னவள் கூடத்துக்கு வந்து அங்கிருந்த தூணுக்குப் பக்கத்தில் நின்று கொண்டாள்.

ஈஸ்வரமூர்த்தி புன்னகைத்தார்.

''வாம்மா... இப்படி வந்து உட்கார். இந்த சின்ன வயசுல குடும்பப் பொறுப்பை ஏத்து கிட்டு அதை சாமர்த்தியமா சமாளிச்சுக்கிட்டு வர்ற உன்னைப் பார்க்கும் போது எனக்கு சந்தோஷமா இருக்கு. உங்கப்பாகிட்டே எதைக் கேட்டாலும் 'சுபத்ராவை கேட்டுச் சொல்றேன்'னு சொல்றார். நாம ரெண்டு பேரும் இந்த கல்யாணத்தைப் பத்தி பேசி முடிவு பண்ணிடறது உத்தமம்.''

சுபத்ரா மெல்லிய குரலில் சொன்னாள்.

''எங்க குடும்பம் ரொம்ப ரொம்ப சாதாரணம்.''

''எனக்குத் தெரியும். கௌதம் சொல்லியிருக்கான்.''

''நீங்க நினைக்கிற அளவுக்கு எங்களாலே எதையும் பண்ண முடியாது.''

ஈஸ்வரமூர்த்தி புன்னகைத்தார்.

''உங்ககிட்டேயிருந்து நான் எதையுமே எதிர்பார்க்கலை. பெண்ணை கட்டின சேலையோடு அனுப்பி வையுங்க போதும். கல்யாணத்தை 'ஜாம்ஜாம்'ன்னு பண்ண நானாச்சு.''

''இருந்தாலும் எங்க பங்குக்கு நாங்க ஏதாவது பண்ணினால்தானே மரியாதை.''

''அப்ப... பண்ணுங்க ... உங்களாலே என்ன முடியுமோ அதைப் பண்ணுங்க. நான் எதையும் டிமாண்ட் பண்ணலை. உங்க வீட்டு பெண்ணை என் பையன் விரும்பினான். அந்த

ஒரு தகுதியை வச்சுக்கிட்டுத்தான் வாசற்ப
ஏறி பெண் கேட்க வந்திருக்கேன். பெரி
பொண்ணுக்கு கல்யாணத்தை பண்ணாமே..
சின்னப் பொண்ணுக்கு பண்றதில்லைன்னு
சொன்னாலும் எனக்கு சந்தோஷமே...
அதுவரைக்கும் என் பையன் காத்திட்
ருக்கட்டும்.''

சுபத்ரா தலையை ஆட்டினாள். ''என்னோட
கல்யாணம் இப்போதைக்கு இல்லை. வீட்டு
பொறுப்புகள் எல்லாம் முடிஞ்ச பின்னாடிதான்
எனக்கு அந்த ஞாபகமே வரும்.''

''உன்னோட அழகுக்கும், புத்திசாலித்
தனத்துக்கும், உன் மனசுல இருக்கிற நல்ல
எண்ணத்துக்கும் ஏற்ற மாதிரி.... குணமான
புருஷன் உனக்கு கிடைப்பான்.''

கலாவதி டிபன் தட்டுகளோடு சமைய
லறையிலிருந்து வெளிப்பட்டு ஸ்டூலின் மேல்
பரப்பிவிட்டு அதே வேகத்தில் உள்ளே
போனாள்.

''கல்யாணத்தை அடுத்த மாசம் வெச்சு
கிட்டா உங்களுக்கெல்லாம் சௌகரியமா
இருக்குமா?''

''ம்...''

''கல்யாணச் செலவுகளைப் பத்தின
தயக்கமே உங்ககிட்டே வேண்டாம். உங்க
குடும்ப நிலைமை எனக்கு தெரியும். உங்க
பொண்ணுக்கு நீங்க பிரியமானதை போடுங்க.
அதுவும் முடியலையா... விட்டுடுங்க.
கலாவதி இனிமே உங்க வீட்டுப் பெண்
ணில்லை. நம்ம வீட்டு பொண்ணு.''

''ரொம்ப நன்றிங்க.''



சுபத்ரா கண்ணீர் மல்க கைகளைக் குவித்தாள். சிவசாமி தோளில் போட்டிருந்த மேல்துண்டால் ஈரமாகிப் போன கண்களை ஒற்றிக் கொண்டார்.

## 7

> **எப்பொழுதும் பயந்து கொண்டிருப்பதை விட ஆபத்தை ஒரு தடவை தைரியமாக எதிர்ப்பது நல்லது.**

மறுநாள் காலை ஆறு மணி.

சீக்கிரமே சுபத்ரா குளித்து எங்கோ புறப்பட்டுப் போகத் தயாராவதைக் கவனித்த அம்மாக்காரி ராஜம் தயக்கமாய் எதிரில் வந்து நின்றாள்.

''என்ன சுபத்ரா... எந்த டீச்சர் வீட்லயாவது ஏதாவது விசேஷமா?''

''இல்லேம்மா...''

''பின்னே...?''

''கரஸ்பாண்டெண்ட் வீட்டுக்குப் போகணும்.''

''எதுக்கு...?''

''கடனா கொஞ்சம் பணம் கேக்கத்தான்.''

''பணமா...? எதுக்கு...?''

''பேங்க்ல வெச்சிருக்கிற ரெட்டை வடச் சங்கிலியை திருப்பிடலாம்ன்னுதான்.''

''அது எதுக்கு... இப்போ...?''

''கல்யாணமாகப் போகிற கலாவதிக்கு நாம எதையாவது போட்டு அனுப்ப வேண்டாமா?''

''அவங்கதான் எதுவும் வேண்டாம்னு
சொல்லிட்டாங்களே?''

''அவங்க சொன்னா... அதை அப்படியே
வேதவாக்கா எடுத்துக்கிறதா... பொன்னை
வைக்கிற இடத்துல பூவையாவது
வைக்கணும்னு சொல்லுவாங்க. கட்டின
சேலையோடு கலாவதியை அனுப்ப எனக்கு
இஷ்டமில்லை. ஒரு ரெட்டைவட
சங்கிலியையாவது போட்டு அனுப்புவோம்.''

''பேங்க்ல ஆறாயிரத்தை கட்டினாத்தான்
நகையைத் தருவாங்க.''

''அதுக்கான பணத்தைத்தான்
கரஸ்பாண்டெண்ட்கிட்டே கேக்கப்
போறேன்.''

''குடுப்பாரா...?''

''கேட்டுப் பார்க்கலாம்.''

''அந்த மனுஷன் பாசமா பேசுவார். ஆனா
பணத்தைக் கண்ணுல காட்ட மாட்டார்.''

''அப்படி சொல்லாதேம்மா. நம்ம
குடும்பத்துமேல அவர்க்குக் கொஞ்சம்
அக்கறையிருக்கு. அப்பாவை அவர் அடிக்கடி
விசாரிப்பார்.''

''மனுஷன் புத்தி இப்போ மாறியிருக்கோ
என்னவோ... எதுக்கும் கேட்டுப் பாரு
கிடைச்சா... நம்ம அதிர்ஷ்டம். பொண்ணை
துடைச்சு வச்ச மாதிரி அனுப்பாமே... ஒரு
சங்கிலியை போட்டாவது அனுப்பலாம்.''

சுபத்ரா வானிடி பேக்கை எடுத்துக்
கொண்டாள்.

''காப்பி கலக்கி தர்றேன். ஒரு வாய்
சாப்பிட்டு போடி.''

''வேண்டாம்மா... காப்பியை
குடிச்சிட்டிருந்தா நேரமாயிடும். ஆறரை



மணிக்குள்ளே போனாத்தான் கரஸ்பாண்டெண்டைப் பிடிக்க முடியும்.''

ராஜம் ஒரு பெருமூச்சோடு மகளைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அவள் தெருவில் இறங்கி நடக்க ஆரம்பித்து விட்டாள்.

கிராமம் சரிவர விழிக்காமல் ஒருவித சோம்பல் தனத்தோடு தெரிய - நெற்பயிரின் வாசம் கலந்து விட்ட ஈரப்பதக் காற்றை சுவாசித்தபடியே செம்மண் பாதையில் நடந்து - பத்து நிமிஷ நடைக்குப் பின் தென்னந் தோப்புக்கு நடுவில் இருந்த சண்முக ராஜனின் பங்களாவுக்கு வந்து சேர்ந்தாள்.

வீட்டு வாசலில் நாற்காலி போட்டு குத்தகைக்காரர்களோடு பேசிக் கொண்டிருந்த சண்முகராஜன் சுபத்ராவைப் பார்த்ததுமே நெற்றியைச் சுருக்கினார்.

''என்னம்மா இவ்வளவு காலையில்? எம். பி. பதினொரு மணிக்குத்தானே டெல்லியிலிருந்து வருவார்.''

''அதில்ல... ஸார்... இது வேற விஷயம்...''

''அப்படியா... உள்ளே போய் உட்காரம்மா. இவங்களை பேசி அனுப்பிச்சிட்டு வந்துடறேன்.''

சுபத்ரா வீட்டிற்குள் போய் வரவேற்பறையிலிருந்த கூடை நாற்காலியில் போய் உட்கார்ந்தாள். சோபாவுக்கு கீழே படுத்திருந்த டாபர்மென் வகையைச் சேர்ந்த அந்த நாய் சோம்பலாய் எழுந்து வந்து சுபத்ராவை முகர்ந்து விட்டு 'நீ நல்லவள்' என்கிற மாதிரி நகர்ந்து போயிற்று.

சுவரில் சண்முகராஜன் அரசியல் தலைவர்களோடு சிரித்தார். கை குலுக்கினார் தோளில் கைபோட்டுக் கொண்டு அமர்த்தலாய் பார்த்தார். இடது பக்கச் சுவரில் பெரிதாய் விவேகானந்தர் படம். கைகளைக் கட்டிக் கொண்டு **'எழுமின், விழிமின், கருதிய காரியம் கைகூடும் வரைக்கும் உழைமின்'** என்றார்.

சுபத்ராவின் மனசுக்குள் பயமாய் யோசனைகள் ஓடின. 'எனக்கு உத்தியோகமே நிச்சயமில்லாத நிலையில்... இவரிடம் கடன் கேட்டால் கொடுப்பாரா?

இந்த இரண்டு நாட்களில்தான் எவ்வளவு சம்பவங்கள்? டெர்மினேஷன் ஆர்டர், அப்பாவுக்கு கண் ஆபரேஷன் செய்ய வேண்டிய கட்டாயம், கணேஷின் லெட்டர், கலாவதிக்கு அவசரமாய் கூடி வந்த கல்யாணம்...

நடைச் சத்தம் கேட்டது.

சண்முகராஜன் புன்னகையோடு உள்ளே வந்தார்.

''வேலைக்கு சேர்ந்த புதுசுல ஒரு தடவை இந்த வீட்டுக்கு வந்திருக்கே இல்லையா சுபத்ரா...?''

''ஆமா... ஸார்''

''என்ன விஷயம் இவ்வளவு காலங்கார்த்தாலே...?''

''வ... வந்து... ஸார்''

''சொல்லும்மா...''

''தங்கச்சிக்கு கல்யாணம் நிச்சயமாயிருக்கு ஸார்!''

''அட... இதென்ன திடீர்னு...?''



''நாங்களே எதிர்பார்க்காத சம்பந்தம் ஸார்... இண்டஸ்ட்ரியலிஸ்ட் ஈஸ்வரமூர்த்தியை உங்களுக்கு தெரியுமா ஸார்?''

''தெரியுமே...!''

''அவரோட மகன்தான்.''

''அவங்க பெரிய இட்மாச்சே...?''

''கலாவதியும் அவரோட பையனும் ஒருத்தரையொருத்தர் விரும்பறாங்களாம்...''

''காதல் விவகாரமா...? அப்படிச் சொல்லு...''

''ஸார்...! மாப்பிள்ளை வீட்டுக்காரங்க எங்க வீட்டிலிருந்து காசு பணம் எதையும் எதிர்பார்க்கலை... கட்டின புடவையோடு பெண்ணை அனுப்பி வெச்சா போதும்னு சொல்றாங்க...''

''பரவாயில்லையே...?''

''இருந்தாலும் ஸார்... கலாவதியை அப்படி துடைச்ச மாதிரி அனுப்ப எனக்கு மனசு கேட்கலை. எங்கம்மாவோட ரெட்டைவடச் சங்கிலியை இப்போ பேங்கிலிருந்து எடுத்து கலாவதிக்கு போட்டு புருஷன் வீட்டுக்கு அனுப்பலாம்னு நினைக்கிறேன்.''

''போட்டுடேன்...''

''அ... அதுக்கு...''

''அதுக்கு...?''

''உங்க உதவி கொஞ்சம் வேணும் ஸார்.''

''என்னோட உதவியா...?''

''ஆமா ஸார்... பேங்கிலிருந்து நகையை எடுக்க ஐயாயிரம் ரூபா பணம் வேணும். அந்த பணத்தை நீங்க குடுத்து உதவினா

பரவாயில்லை..."

சண்முகராஜன் பதில் ஏதும் சொல்லாம திரும்பி உள் அறையை எட்டிப்பார்த்து குர கொடுத்தார்.

"பொன்னா..."

"அய்யா..."

"காப்பி கொண்டா."

அவன் உள்ளே போனதும் சுபத்ராவை ஏறிட்டார். "பணம் எவ்வளவு வேணும்னு கேட்டே...?"

"அஞ்சாயிரம் ஸார்."

"போதுமா...?"

"போதும்..."

"மூணுமாசத்துக்குள்ளே உங்கப்பாவுக் ஒரு ஆபரேஷன் பண்ணவேண்டியிருக்கு. அந்த ஆபரேஷனுக்கான செல ஏழாயிரம்னு கேள்விப்பட்டேன். அந் பணத்துக்கு என்ன பண்ணப்போறம்மா?"

"என்ன பண்றதுன்னு தெரியலை ஸார்..."

"அதையும் என்கிட்டே கேக் வேண்டியதுதானே...?"

"ஸ... ஸார்."

"நகையை மீட்க அஞ்சாயிரம். உங்கப்பாவோட கண் ஆபரேஷனுக்கு ஏழாயிரம். கல்யாணச் செலவுக்கு ஒ எட்டாயிரம். எல்லாமா சேர்த்து ஒ இருபதாயிரம் ரூபா தந்துடறேன். சந்தோஷ தானே?"

"ஸ... ஸார்."

இதயம் பூராவும் ஆனந்தம் அடைத்து கொண்டது. "நா... நான் இ



எதிர்பார்க்கவேயில்லை ஸார்."

"எம். பி. மூலமா சி.ஈ.ஓ.வை மடக்கி உன்னோட டெர்மினேஷன் ஆர்டரை கேன்ஸல் பண்ண நானாச்சு. நீ நம்ம பள்ளிக்கூடத்துலதான் தொடர்ந்து வேலை பார்க்கப் போறே!"

சுபத்ரா கைகூப்பினாள்.

"ஸ... ஸார்... நீங்க பண்ற இந்த உதவிக்கெல்லாம்... எப்படி நன்றி செலுத்தறதுன்னே தெரியலை."

"நீ எப்படி நன்றி செலுத்தணும்னு நான் சொல்லித்தர்றேன்."

"ஸ... ஸார்..."

"அந்த நன்றியை நீ சுலபமா செலுத்தலாம்."

"எ... எனக்குப் புரியலை ஸார்."

"தேங்காயை உடைச்ச மாதிரி 'பட்'டுன்னு சொல்லட்டுமா?"

"ம்..."

"வாரத்துக்கு ரெண்டு தடவை நீ என் படுக்கைக்கு வரணும்."

சுபத்ரா துடித்துப்போய் நிமிர்ந்தாள்.

"ஸ... ஸார்."

"என் பெண்டாட்டி செத்த பிறகு நான் எந்தப் பெண்ணையும் பார்த்து சபலப்பட்டது கிடையாது. கொஞ்ச நாளாவே உன்னைப் பார்க்கும் போதெல்லாம் மனசுக்குள்ளே சபலம். அதான் வெட்கத்தை விட்டே கேட்டுட்டேன்."

"ஸ... ஸார்... நீங்க... இப்படி...?"

"இருக்கக் கூடாதுதான். முடியலையே.

நடுத்தர வயசுல பெண்டாட்டி செத்து
போனா இந்த இம்சைதான். நான் ஒண்ணு
உன்னைக் கட்டாயப்படுத்தலை சுபத்ரா.
என்கிட்டேயிருந்து வாங்கிக்கப் போகிற
உதவிகளுக்கு... ஒரு நன்றிக்கடனா..
கொஞ்ச நாள் மட்டும்... என்னோட
படுக்கைக்கு நீ வரணும். உறவை ரகசியம
வெச்சுக்கலாம். இரண்டு வருஷம் கழிச்சி..
நானே உனக்கொரு நல்ல மாப்பிள்ளையைக்
பார்த்து கல்யாணத்தைப் பண்ண
வெச்சுடறேன்."

சுபத்ரா உறைந்து போய் நின்றிருந்தாள்.

சண்முகராஜன் தொடர்ந்தார். "இந்த
ஏற்பாட்டுக்கு நீ ஒத்துக்கலைன்னா..
உனக்காக நான் எதையுமே பண்ண
மாட்டேன். உன்னோட வேலை
நிறுத்தத்துக்காக எம். பி. கிட்டே போன்ல
பேச மாட்டேன். பேங்க்ல இருக்கிற நகையை
மீட்கிறதுக்காக நீ கேட்ட பணத்தையும்
குடுக்க மாட்டேன். அது மட்டுமில்லை.
உங்கப்பாவுக்கு இப்ப வந்திட்டிருக்கிற
பென்ஷன் பணத்துக்கும் என்னால ஒரு
முட்டுக்கட்டையை போட முடியும். செஞ்சு
காட்டட்டுமா?"

விழிகள் விரிய அவரையே பார்த்துக்
கொண்டிருந்தாள் சுபத்ரா. அவர் ஓநாய்
சிரிப்போடு தொடர்ந்தார். "நீ என்னோட
படுக்கையை பகிர்ந்துகிட்டா உனக்கு
கிடைக்கப் போற அனுகூலங்களை
ஒவ்வொண்ணாச் சொல்றேன் கேட்டுக்கோ.
உன்னோட டீச்சர் வேலை ஒரு வாரத்துக்
குள்ள நிரந்தரமாகும். நகையை மீட்கற



க்கும், உன் அப்பாவோட கண் ஆபரேஷ,
க்கும் வேண்டிய பணம் உடனே
கிடைக்கும். கலாவதியோட கல்யாணச்
செலவுக்குன்னு தனியா ஒரு பத்தாயிரம் ரூபா
தர்றேன். அப்புறம் உன்னோட தம்பி
பசுபதிக்கு அடுத்த பத்து நாள்ல ஒரு நல்ல
வேலையை வாங்கித் தர்றேன். இப்ப நான்
சொன்ன அனுகூலமெல்லாம் உனக்கு
கிடைச்ச பின்னாடி நீ என்னோட
படுக்கையைப் பகிர்ந்துக்க வரலாம்."

வேலையாள் காப்பியோடு வந்து டீபாயின்
மேல் பரப்பி விட்டு போனான். அவன் தலை
மறைந்ததும் சண்முகராஜன் சுபத்ராவை
ஏறிட்டார். "நான் இப்படி பேசறது உனக்கு
அதிர்ச்சியாத்தான் இருக்கும். எனக்கு வேற
வழியில்லை. மனசுக்குள்ளே இருக்கிற
ஆசையை எத்தனை நாளைக்குத்தான்
பொத்தி பொத்தி வெச்சிட்டிருக்க முடியும்?"

"நான் வர்றேன்."

நகர்ந்தாள் சுபத்ரா.

"என்ன பதில் சொல்லாமே போறே...?
மனசுக்குள்ளே குழப்பமா இருக்கா?
அப்படித்தான் இருக்கும். என்னடா இந்த
மனுஷன் தனக்கு வெப்பாட்டியா இருக்கச்
சொல்றாரேன்னு மனசு குமுறும். காசா...
கற்பா...ன்னு மனசு ஒரு பட்டிமன்றமே
நடத்தும். நீ நிதானமா யோசனை பண்ணிட்டு
வா."

சுபத்ரா நடந்தாள்.

"அட... காப்பி சாப்பிட்டு போம்மா."

சண்முகராஜனின் பேச்சை
பொருட்படுத்தாமல் நடந்தாள் சுபத்ரா.

# 8

**தீயோர் நேசத்தை விட தனிமை மேலானது.**

சுபத்ரா சண்முகராஜன் வீட்டிலிருந் கிளம்பி தன் வீட்டை நோக்கி வந் கொண்டிருந்த போது பஸ் ஸ்டாண்டி கலாவதி நின்றிருப்பது தெரிந்தது. ஆச்சா மாய் பக்கத்தில் போனாள்.

''என்ன கலா இவ்வளவு சீக்கிரத்தி கிளம்பிட்டே?''

''காலேஜுக்கு தான்க்கா...''

''இன்னிக்கு என்ன...?''

''ப்ராக்டிகல் க்ளாஸ். ரிக்கார்ட் நோட்டை சப்மிட் பண்ணனும். நீ கரஸ்பாண்டெண் வீட்டுக்கு போய்ட்டு வர்றியாக்கா...?''

''ஆமா...! உனக்கு யார் சொன்னா?''

''அம்மா...! பேங்க்ல இருக்கிற நகைை மீட்டு என் கழுத்துல... நீ போட்டியானா எனக்கு மாப்பிள்ளை வீட்ல கொஞ்ச கௌரவமா இருக்கும். நகைை மீட்டுருவியாக்கா?''

''ம்... ம்...''

''ஏன்க்கா ஒரு மாதிரியா இருக்கே... கரஸ்பாண்டெண்ட் பணம் தரமாட்டேன்னு சொல்லிட்டாரா?''

''அ... அதில்லை.''



''பின்னே...?''

''அ... அவர் வெளியே போயிருக்காராம்.''

''அவ்வளவுதானே...? பள்ளிக்கூடத்துக்கு அவர் எப்படியும் வருவார் இல்லையா? அப்ப கேட்டுப் பாரேன்.... நீ மட்டும் நகையை மீட்டு என் கழுத்துல போட்டுட்டா உனக்கு ஒரு கோயில் கட்டி கும்பிடுவேன்.''

சொல்லிக் கொண்டிருக்கும் போதே-

டவுன் பஸ் வர -

சுபத்ராவிடம் விடைபெற்றுக் கொண்டு பஸ்சை நோக்கி ஓடினாள் கலாவதி. அவள் பஸ்சில் ஏறி புறப்பட்டுப் போகும் வரை பார்த்துக் கொண்டிருந்து விட்டு திரும்பி வீட்டை நோக்கி நடந்தாள் சுபத்ரா. தெருமுனைக்குள் நுழைந்ததுமே - அம்மா வாசலில் நின்றிருப்பது தெரிந்தது. பக்கத்தில் போனதும் அம்மா ஆர்வமாய் கேட்டாள்.

''என்னாச்சு சுபத்ரா...?''

பேசாமல் உள்ளே போனாள்.

அம்மாக்காரி தொடர்ந்தாள்.

''என்னாச்சுன்னு கேக்கறேன்ல்ல...?''

''கரஸ்பாண்டெண்ட் வீட்ல இல்ல...''

''அவ்வளவுதானே? அதுக்கு ஏன் என்னவோ மாதிரி இருக்கே? மத்தியானமோ, சாயந்தரமோ... அவரைப் போய் பார்த்தா போச்சு.''

''அப்பாவை எங்கே காணோம்?'' பேச்சை மாற்றினாள்.

''அவர் இன்னமும் படுத்துட்டிருக்கார். எந்திரிச்சா தலையைச் சுத்தி சுத்தி வருதாம். காப்பியை கொண்டு போய் குடுத்து குடிக்க

வெச்சேன். அவருக்குவேற ஒரு ஆபரேஷ
பண்ணியாகணும். அது என்னி
முடியுமோ...?''

ராஜம் புலம்பிக் கொண்டிருக்கும் போ
சுபத்ரா பக்கத்து அறைக்குள் நுழைய - அங்
மேஜையடியில் உட்கார்ந்து எதையோ எழுத்
கொண்டிருந்த தம்பி பசுபதி - மேஜை
டிராயரைத் திறந்து எதையோ மறைத்தான்.

சுபத்ரா அதை பார்த்து விட்டாள்.

''என்னடா அது?''

''ஒண்ணுமில்லேக்கா...''

''ஒண்ணுமில்லையா...? நான் வந்தத
எதையோ மேஜை டிராயர்க்குள்ளே போட்
மறைச்சே?''

''அ... அது வந்து... வந்து...''

''சொல்லு...''

''ஓ... ஒரு வேலைக்கு அப்ளிகேஷன்.''

''அப்ளிகேஷன்னா அதை ஏண்
மறைக்கணும்? எடு... பார்க்கலாம்
சொன்னவள் அவன் நகராமல் இருக்கவே
தானே மேஜை டிராயரைத் திறந்து எடுத்தா

உள்ளே ஒரு இன்லேண்ட் கவர்.

கவரின் பாதி பரப்பளவை வியாபித்து
கொண்டு பசுபதியின் கையெழுத்
ஓடியிருந்தது. சுபத்ரா அதை எடுத்தாள்.

வரிகளின் மேல் பார்வை ஓடியது.

அன்புள்ள கதிர்வேலுவுக்கு,

பசுபதி எழுதிக் கொண்டது. உன் கடித
என் கைக்கு கிடைத்து பத்து நாட்களாகிய
உனக்கு பதில் போடாததற்கு காரணம் எ



**மனக் குழப்பம்தான். வேலைக்கு முயற்சி செய்து சோர்ந்து போய் - அது கிடைக்காத பட்சத்தில் ராணுவத்தில் போய் சேர்வது என்கிற ஓர் யோசனை. எனக்கு ஆரம்பத்தில் அதிர்ச்சியர்க இருந்தாலும் இப்போது அதுவே எனக்கு சரியாய் படுகிறது. மனதில் எந்தவிதமான சந்தோஷமும் இல்லாமல் வெறும் சோற்றுக்கே இந்த வீட்டில் உட்கார்ந்திருப்பது எனக்கு நரகமாக இருக்கிறது. அடுத்த வாரத்தில் ஒருநாள் வீட்டை விட்டுக் கிளம்பி உன்னிடம் வருவேன். இரண்டு பேருமே ரயிலேறி வடநாட்டுப் பக்கம்...**

கடிதம் பாதியில் நின்றிருந்தது.

சுபத்ரா விழிகளை உயர்த்தினாள்.

''இதுதான் நீ எழுதிட்டிருந்த அப்ளிகேஷனா...?''

''அ... அக்கா...''

''என்ன... பட்டாளத்துக்கு ஓடிப் போறதா முடிவே பண்ணிட்டே போலிருக்கே?''

''வே... வேற... வழி எனக்கு தோணலைக்கா.''

''உனக்கு வேலைதானே வேணும்? பத்து பதினைஞ்சு நாள் பொறு.''

''அக்கா...!''

''கரஸ்பான்டெண்ட்கிட்டே உன்னைப் பத்தி சொன்னேன். அவர் உனக்கு ஒரு வேலையை ஏற்பாடு பண்ணித் தர்றதா சொல்லியிருக்கார்.''

பசுபதியின் கண்களில் சந்தோஷம் ஈஷிக் கொண்டது. ''கரஸ்பாண்டென்ட் நிஜமா

எனக்கு வேலை வாங்கித் தருவாரா அக்கா...?

''இப்ப அவர்கிட்டே பேசிட்டுத்தாலே வர்றேன்.''

''என்னால நம்ப முடியலைக்கா...''

''நம்பு! இந்தா... இந்த லெட்டரை மொதல்ல கிழிச்சு எறி.''

பசுபதி அந்த லெட்டரை வாங்கி உற்சாகமாய் கிழித்து எறிந்தான். பின் மெல்லிய குரலில் ''அக்கா...'' என்றபடி அவளை ஏறிட்டான்.

''ம்...''

''அப்பாவோட ஆபுரேஷனுக்கு என்ன பண்ணப் போறோம்?''

''அதுக்கும் ஏற்பாடு பண்ணியிருக்கேன்.''

பசுபதி சுபத்ராவை வியப்பாய் பார்த்தான்.

## 9

**தனக்கு உதவியதை மறக்காதே!**
**தான் உதவியதை நினைக்காதே!**

அன்று சாயந்தரமே பள்ளி விட்டதும் சண்முகராஜனின் வீட்டை நோக்கிப் போனாள் சுபத்ரா. போர்டிகோ படியில் உட்கார்ந்திருந்த வேலையாள் அவளைப் பார்த்ததும் எழுந்தான்.

''அம்மா...''

''அய்யா இருக்காரா...?''



''தூங்கிட்டிருக்காரம்மா...''

''சரி... நான் போய்ட்டு அப்புறமா வர்றேன்.'' சொல்லிக் கொண்டே நகர முயன்றவளை பக்கவாட்டு ஜன்னல் திறக்கப்படும் சத்தம் ஈர்த்தது.

திரும்பினாள்.

ஜன்னல் கம்பிகளில் சண்முகராஜனின் முகம் தெரிந்தது.

''வாம்மா சுபத்ரா...''

சுபத்ரா உள்ளே போனாள்.

வேஷ்டியும் வெற்று மார்புமாய் கட்டிலில் உட்கார்ந்திருந்தார் சண்முகராஜன். அவளைப் பார்த்ததும் பெரிதாய் புன்னகைத்தார்.

''யோசிச்சு முடிச்சுட்டே போலிருக்கே...?''

''ம்...''

''என்ன முடிவு...?''

''கலாவதியோட கல்யாணத்துக்கு நகை வேணும். அப்பாவுக்கு ஆபரேஷன் பண்ணணும். எனக்கு வேலை நிரந்தரமாகணும். என்னோட தம்பிக்கு வேலை கிடைக்கணும்.''

''நாலு கோரிக்கைகளும் நிறைவேறும்.'' தொப்பையைச் சொறிந்து கொண்டே இளித்தார் சண்முகராஜன்.

''அதெல்லாம் நிறைவேறின பின்னாடி தான்... நீங்க என்னைத் தொட முடியும்.''

''நான் அவ்வளவு அவசரக்காரன் இல்லை சுபத்ரா. உனக்கும் எனக்கும் மத்தியில் ஒரு ஜென்டில்மேன் அக்ரிமென்ட். உன்னோட நாலு கோரிக்கைகளில் இரண்டு கோரிக் கையை உடனே நிறைவேத்த முடியும்.''

சொன்னவர் எழுந்து போய் சுவரோரமா
நின்றிருந்த பீரோவைத் திறந்து இரண்டு நா
ரூபாய் கட்டுக்களை எடுத்து வந்து அவளிட
நீட்டினார்.

"இதுல இருபதாயிரம் ரூபா இருக்கு. இ
வெச்சி நகையை மீட்டுக்கலாம். உங்கப்
வுக்கு ஆபரேஷன் பண்ணலாம். மீ
பணத்தை கல்யாண செலவுக்கும் வச்சுக்
லாம். பணம் போதலைன்னா இன்னு
தர்றேன்."

சுபத்ரா தயங்கினாள்.

"ம்... வாங்கிக்க..."

கைகள் நடுக்கமாய் நீண்டு பெற்று
கொண்டன.

சண்முகராஜன் தொடர்ந்தார். "உன்னோ
தம்பி பசுபதியை நாளைக்குக் காலையி
எட்டு மணிக்கு முன்னாடி வந்து என்னை
பார்க்கச் சொல்லு."

"ம்..."

"உன்னோட டீச்சர் வேலையை
நிரந்தரமாக்கறது சம்பந்தமா உ
முன்னாடியே எம்.பி.கிட்டே பேசிடறேன்
போதுமா...?" வேஷ்டியை சரிவர இழுத்து
கட்டிக் கொண்டவர் - டெலிபோனுக்கு போய
ரிஸீவரை எடுத்துக் கொண்டார். டயலை
நான்கைந்து தரம் சுழற்றி பின் சிரிப்போடு
பேசினார்.

"ஹலோ..."

"..."

"நான்தான் சண்முகராஜன்."

"..."



"டெல்லியிலிருந்து எப்ப வந்தீங்க...?"

"..."

"மத்தியானம் ரெண்டு மணிக்குத்தான் வந்தீங்களா...? டெல்லியில் கட்சி நிலைமையெல்லாம் எப்படியிருக்கு?"

"...."

"பாலிடிக்ஸ்னாலே அப்படித்தான்."

"...."

"விஷயமில்லாமலா உங்களுக்கு போன் பண்ணுவேன்? நம்ம ஸ்கூல்ல சுபத்ரான்னு ஒரு பொண்ணு 'டென்' எ ஒன்'ல டெம்ப்பரரியா வேலை பார்த்துட்டு வர்றது... திடீர்னு அதுக்கு இப்ப டெர்மினேஷன் ஆர்டர் குடுத்துட்டாங்க. நமக்கு வேண்டிய பொண்ணு அது. புவர் பேமிலி. நீங்க இந்த விஷயத்துல கொஞ்சம் தலையிட்டு டெர்மினேஷன் ஆர்டரை ரத்து பண்ணி - வேலையை நிரந்தரமாக்கணும்."

"..."

"உங்களுக்கு இது அஞ்சு நிமிஷ வேலை... மறக்காமே பண்ணணும்."

"...."

"தேங்க்ஸ்... ரெண்டு நாள்ல ஆர்டரை எதிர்பார்க்கலாமா...?"

"..."

"அப்புறம்... வீட்ல எல்லாரும் சௌக்யம் தானே...? பொண்ணுக்கு வரன் பார்க்கிற மாதிரி கேள்விப்பட்டேன்... வீட்ல சீக்கிரமே சுபகாரியம் நடக்கட்டும்."

சண்முகராஜன் ரிஸீவரை வைத்து விட்டு - சுபத்ராவிடம் திரும்பினார். "உனக்கு இனிமே

நல்ல நேரம்தான். எம். பி. குஷி மூட்ல இருந்தார். உன் பிரச்னையை ரெண்டு நாள்ல முடிச்சிடறதா சொல்லியிருக்கார். ஸோ... உன்னோட மூணாவது கோரிக்கையும் ஓ.கே. ஆயிட்டது. இன்னும் ஒரு வாரத்தில் பசுபதிக்கு ஒரு நல்ல கம்பெனியில வேலை வாங்கிக் கொடுக்க நானாச்சு. உன் தம்பி கைக்கு அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் கிடைச்ச அன்னிக்கே - என் படுக்கைக்கு நீ வரணும்.''

''....''

''என்ன பேச்சையே காணோம்.''

''வ... ர்... றே... ன்...''

## 10

> **ஓடுகிற குதிரைக்கு லாடம் அடிக்க முடியாது.**

அன்றைக்கு இரவு - சுபத்ராவின் குடும்பமே ஆச்சரியப்பட்டது.

''சண்முகராஜனின் மனசுக்குள்ளே இப்படியொரு தாராள எண்ணங்களா...? என்னால நம்ப முடியவில்லையே. கூலியாள்கிட்டே ஒரு ரூபாய்க்கெல்லாம் சண்டை போட்ட ஆளாச்சே அவர்...?'' - சிவசாமி.

''இருபதாயிரத்தை தூக்கிக் குடுத்து பசுபதிக்கு ஒரு வேலையையும் வாங்கித் தர்றதா சொல்லியிருக்கார்ன்னா நிச்சயமா அவர் பெரிய மனுஷன்தான்'' ராஜம்



கன்னத்தில் கை வைத்தாள்.

''அப்ப... ஊர்ல அவரைப் பத்தி ஜனங்க பேசிக்கிறதெல்லாம் பொய்யா...?'' கலாவதி . கேட்டாள்.

''நம்ம குடும்பத்துக்கு இப்படி வலிய வந்து இவ்வளவு உதவி பண்றார்ன்னா... ஏதாவது காரணம் இருக்கும்ன்னு நான் நினைக்கிறேன்.'' - பசுபதி நெற்றியை தேய்த்துக் கொண்டே சுபத்ராவை பார்த்தான்.

சுபத்ரா புன்னகைத்தாள். ''ஒரு காரணமும் இல்லை. கரஸ்பாண்டெண்ட்டுக்கு அப்பா மேல ஒரு தனி மரியாதை. அந்த மரியாதைக்காகத்தான் இதையெல்லாம் பண்ணியிருக்கார். இந்த ஊர் ஜனங்களுக்கு கரஸ்பாண்டெண்ட்டைப் பத்தி மோசமான எண்ணம் பரவறதுக்கு காரணம்.... அவர் ஒரு நாத்திகவாதி. கோயில் திருவிழாவுக்கு ஒரு பைசா நன்கொடை குடுக்க மாட்டார். யாராவது தப்பு பண்ணினா கொஞ்சம் குரலை உயர்த்தி பேசுவார். இந்த இரண்டு காரணங்களுக்காக அவரை ஜனங்க கெட்டவரா மாத்திக்கிட்டாங்க. உண்மையிலேயே அவருக்கு இளகிய மனசு. நம்ம குடும்ப நிலையைப் பற்றி நல்லா தெரிஞ்சு வெச்சுக்கிட்டு அவரே வலிய கூப்பிட்டு உதவி பண்ணியிருக்கார்.''

சிவசாமி தலையாட்டினார். ''நீ என்ன சொன்னாலும் சரிம்மா... அவரோட இந்த திடீர் கரிசனம் எனக்கு ஆச்சர்யமா இருக்கு.''

சுபத்ரா லேசான கோபத்தோடு அப்பாவை ஏறிட்டாள். ''அப்பா... நம்ம குடும்பம் இப்ப இருக்கிற நிலைமையில் ஒருத்தர் பண்ற உதவியை விமர்சனம் பண்றது சரியில்லை. அவர் பண்ற இந்த உதவிகளை வெச்சுத்தான்

நம்ம குடும்பம் மேலுக்கு வரப் போகுது. அவர் இவ்வளவு பணத்தை நமக்கு இனாமா குடுத்துடலை... கடனாத்தான் குடுத்திருக்கார். வட்டியில்லா கடன். முடிஞ்சப்பெல்லாம் பணத்தைக் கொண்டு வந்து குடுத்து கடனை தீர்க்கச் சொல்லியிருக்கார்..."

ராஜம் பெருமூச்சு விட்டாள்.

"எல்லாம் சரிதான்... ஆனா..."

"என்ன ஆனா...?"

"நீயும் ஒரு கல்யாணத்தைப் பண்ணிகிட்டு..."

சுபத்ரா முறைக்க - ராஜம் வாயை மூடிக் கொண்டாள். "என்னோட கல்யாணத்தைப் பத்தி யாரும் பேசக் கூடாது. எனக்கு கல்யாணம் பண்ணி வைங்கன்னு நானே கேக்கிறப்போ பண்ணி வெச்சா போதும்...! பசுபதி!"

"என்னக்கா...?"

"நாளைக்கு காலையில் எட்டு மணிக் குள்ளே கரஸ்பாண்டென்டை அவர் வீட்ல போய்ப் பாரு... உன்னோட வேலைக்கு அவர் ஏற்பாடு பண்ணுவார்."

பசுபதி தலையாட்டினான்.

## 11

> **வாங்குகிறவனுக்கு நூறு கண்கள் தேவை.**
> **விற்கிறவனுக்கு ஒன்று போதும்.**

இரண்டு நாட்கள் கழித்து - அந்த காலை வேளை பதினோரு மணியளவில் - பத்தாம்



வகுப்பில் பாடம் நடத்திக் கொண்டிருந்த சுபத்ராவை ப்யூன் மூலம் வர வழைத்தார் கரஸ்பாண்டென்ட் சண்முகராஜன்.

யாருமில்லாத அந்த அறையில் அவர்க்கு எதிரே போய் தலைகுனிந்து நின்றாள் சுபத்ரா.

"இந்தா..."

ஒரு பழுப்பு நிற கவரை நீட்டினார். "பர்மனென்டா இதே பள்ளியில் நீ வேலை பார்க்கலாம்ங்கிற வாசகத்தோடு அரசாங்க நியமன லெட்டர்... எம்.பி. காரியத்தை சாதிச் சுட்டார்..."

"....."

"என்ன... முகத்துல சந்தோஷத்தையே காணோம்...?"

"தேங்க்ஸ்... சார்..."

"பேங்கிலிருந்து நகையை மீட்டாச்சா...?"

"ம்..."

"அப்பாவோட கண் ஆபரேஷனுக்கு ஏற்பாடு பண்ணியாச்சா..."

"வர்ற ஞாயிற்றுக்கிழமை... ஆபரேஷன்."

"குட்... உன் தம்பி பசுபதிக்கு ஒரு உரக் கம்பெனியிலே ஆயிரத்து ஐநூறு ரூபாய் சம்பளத்துல ஒரு வேலையை வாங்கித் தர முயற்சி பண்ணிட்டிருக்கேன். கம்பெனி யோட டைரக்டர் அவுட் ஆஃப் ஸ்டேஷன். அவர் வந்ததுமே அப்பாயிண்ட்மென்ட் ஆர்டர் டைப்பாகி போஸ்ட்ல வந்துடும்..."

"த... தாங்க்ஸ்..."

"தங்கச்சி கலாவதியோட கல்யாணம் என்னிக்கு...?"

"வர்ற மாசம் பத்தாம் தேதி..."

''சந்தோஷம்...''

''நா... நான் வரட்டுமா ஸார்...''

''நில்லும்மா!'' போகத் திரும்பியவளை நிறுத்தினார் சண்முகராஜன். ''உன் தம்பி உத்யோகத்துக்கு போய்ட்டு வந்த மறுநாள் மத்தியானம் மூணு மணிக்கு மேல நீ என்னோட தோப்பு வீட்டுக்கு வர்றே... சரியா...?''

''ம்...''

''என்னை ஏமாத்த நினைச்சா... அதனோட விளைவுகள் விபரீதமா இருக்கும்.''

''தெ... தெரியும்...''

''ஞாபகம் இருந்தா சரி...''

சுபத்ரா இதயம் 'திக் திக்'கென்று அடிக்க வகுப்பறைக்கு திரும்பினாள்.

## 12

**பேராசை முடிகிற இடத்தில் சந்தோஷம் ஆரம்பமாகிறது.**

**சி**வசாமி ஆபரேஷன் முடிந்து தெம்பாய் வீடு திரும்பியிருந்தார். தலைச்சுற்றலும், கண்களை இருட்டிக் கொண்டு வருகிற அந்த மயக்கமும் இப்போது காணாமல் போயிருந்தது. அவர் வீடு திரும்பிய ஒரு மணி நேரத்திற்குள் சண்முகராஜன் ஒரு கூடை நிறைய ஆப்பிளும், ஆரஞ்சும் பெரிய



ஹார்லிக்ஸ் பாட்டிலுமாய் காரில் வந்து இறங்கினார்.

சுபத்ராவைத் தவிர எல்லோரும் பவ்யமாய் கைகுவித்து வரவேற்றார்கள்.

''வாங்க... வாங்க...''

சண்முகராஜன் தங்கப்பல் ஒளிர சிரித்துக் கொண்டே சிவசாமிக்கு பக்கத்தில் வந்து உட்கார்ந்தார்.

''என்ன வாத்தியாரய்யா... உடம்புக்கு இப்போ எப்படியிருக்கு?''

''உங்க புண்ணியத்துல தேறிட்டேன். நீங்க மட்டும் சமயத்துல இந்த உதவியை...''

பேச்சை வெட்டினார் சண்முகராஜன். ''அது உதவி இல்லீங்க. நம்ம ஸ்கூல் வாத்தியாராயிருந்து ரிடையரான உங்களுக்கு நான் பண்ண வேண்டிய கடமை. நீங்க வேண்டாம்ன்னு தடுத்தாகூட நான் பண்ற உதவிகளை நிறுத்த மாட்டேன். கலாவதி யோட கல்யாணத்துக்கு ஏதாவது பண உதவி தேவைப்பட்டாலும் கேளுங்க. தர்றேன்.''

''வேண்டாம்... வேண்டாம்! நீங்க இவ்வளவு பண்ணினதே போதும்.'' சிவசாமி சண்முகராஜன் கைகளைப் பற்றி கண்களில் ஒற்றிக் கொண்டார்.

சண்முகராஜன் பசுபதியிடம் திரும்பினார்.

''தம்பி! நாளைக்கு உனக்கு அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் வந்துடும். நீ வேலை பார்க்கப் போகிற ப்ராஸ்ப்ரஸ் பெர்டிலைஸர்ஸ் கம்பெனி ஒரு ரெப்யூட்டட் கம்பெனி.

ப்ரமோஷன்க்கு நிறைய சான்ஸ் இருக்கு. கடுமையா உழைக்கிறவங்களுக்கு அந்த கம்பெனியில் நல்ல எதிர்காலம் இருக்கு. என்னோட சிபார்சில் வேலைக்குப் போகப் போகிற நீ என்னோட பேரைக் காப்பாத்தணும்.''

''கண்டிப்பா ஸார்...''

ராஜம் பவ்யமாய் கேட்டாள்.

''குடிக்கிறதுக்கு ஏதாவது காப்பி, டீ கொண்டு வரட்டுங்களா?''

''அதெல்லாம் வேண்டாம்...! பானைத் தண்ணி இருக்கா?''

''இருக்கு...''

''ஜில்லுன்னு ஒரு டம்ளர் கொண்டாங்க போதும்.''

ராஜம் ஓட்டமும் நடையுமாய் போய் தண்ணீர் கொண்டு வந்து கொடுக்க, அவர் அண்ணாந்து குடித்து விட்டு எழுந்தார்.

''அம்மா சுபத்ரா...''

''ஸார்...''

''நாளை கழிச்சு மறுநாள் மத்தியானம் மூணு மணிக்கு மேல வீட்ல என்னை வந்து பாரம்மா... பள்ளிக்கூடத்து ஆண்டு விழாவை எப்படி நடத்தறதுன்னு பேசலாம். ஹெட்மாஸ்டர்க்கு ஒண்ணும் தெரியறதில்லை.''

''வ... வறேன்... ஸார்...!''

''கண்டிப்பா... வாம்மா... மறந்துடாதே!''



## 13

**எப்படிப்பட்ட முட்டாளும் பணத்தை சம்பாதித்து விடலாம் - ஆனால் புத்திசாலியால் மட்டும்தான் அதைக் காப்பாற்ற முடியும்.**

மறுநாள் மத்தியானம் மூன்று மணி.

ஹெட்மாஸ்டரிடம் பர்மிஷன் வாங்கிக் கொண்டு சண்முகராஜனின் வீட்டுக்கு போவதற்கு பள்ளியை விட்டு வெளியே வந்தாள் சுபத்ரா. பள்ளிக்கு எதிரே இருந்த டீக்கடையில் உட்கார்ந்து டீ குடித்துக் கொண்டிருந்த பி.டி. இன்ஸ்ட்ரக்டர் கணேஷ் - அவளைப் பார்த்ததுமே வேகவேகமாய் வந்தான்.

''மிஸ் சுபத்ரா... எங்கே கிளம்பிட்டீங்க...? வீட்டுக்கா?''

''ஆ... ஆமா...''

''இவ்வளவு சீக்கிரத்துலே...? உடம்பு கிடம்பு சரியில்லையா?''

''நோ... நோ ஐ'யம் ஆல்ரைட்...''

''கடந்த ஒரு வாரமா உங்களை 'நோட்' பண்ணிட்டு வர்றேன். நீங்க முன்னைப்போல் அவ்வளவு உற்சாகமாயில்லை. ஸ்கூல் ஆக்டிவிடீஸ் எதிலும் பங்கெடுத்துக்கறதில்லை... எனி ரீஸன்?''

''நீங்க நினைக்கிற மாதிரி எதுவும் இல்லை மிஸ்டர் கணேஷ்... கொஞ்சம் ஒர்க் லோட்...

அதிகம்... அவ்வளவு தான்."

"சரி... நான்... அன்னிக்கு சொன்னதப்பத்தி யோசிச்சீங்களா?"

"எதைப்பத்தி...?"

"என்னோட பிரதர் உங்களைக் கல்யாணம்..."

"ஓ... அதுவா? ஸாரி! உங்க பிரதர்க்கு வேற இடத்துல பெண்ணைப் பார்த்து முடிங்க..."

"நேத்து என் பிரதர் கூட டெலிபோன்ல பேசினேன். ரெண்டு வருஷம் வேணும்ன்னாலும் வெயிட் பண்றதா சொன்னார்."

"வெரி... வெரி... ஸாரி... நான் கல்யாணம் பண்ணிக்கப் போறதாயில்லை."

"மிஸ் சுபத்ரா... உங்களை என்னால புரிஞ்சுக்க முடியலை."

"புரிஞ்சுக்க வேண்டாமே. டீ சாப்பிட்டுட்டு கிளம்புங்க. செகண்ட் பெல் கொடுக்க அஞ்சு நிமிஷம்தான் இருக்கு."

திகைத்து நிற்கும் கணேஷைப் பொருட்படுத்தாமல் பிரிந்த செம்மண் பாதைக்குள் பிரவேசித்து தென்னந்தோப்புக்குள் நுழைந்தபோது கால்கள் துவண்டன.

இருதயத்துக்குள் ஏராளமான இரைச்சல்.

சண்முகராஜனின் கால்களில் வீழ்ந்து 'ஸார்... வேண்டாம் சார்... என்னை எதுவும் பண்ணிடாதீங்க. நான் உங்க பொண்ணு மாதிரி என்று கெஞ்சிப் பார்க்கலாமா?'

'கெஞ்சல்களுக்கு எல்லாம் மனுஷன் மசிய மாட்டாரே?'



'வேறு என்ன செய்யலாம்.'

'அவர்க்கு முன்னாடி தோப்பு கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொள்ளலாமா?'

'வேண்டாம்... என் தற்கொலை வீட்டில் இப்போது இருக்கிற நிம்மதியையும், சந்தோஷத்தையும் கெடுத்து விடும்.'

யோசனைகளில் தூரம் குறைந்து - சண்முகராஜனின் வீடு நெருங்கியது - பயத்தில் வியர்வை ஊற்றியது.

காம்பௌண்ட் கேட்டின் மேல் கையை வைக்கும் போதே போர்டிகோவில் நாற்காலியைப் போட்டுக் கொண்டு சண்முகராஜன் காத்திருப்பது தெரிந்தது.

உள்ளே வந்தாள்.

சண்முகராஜன் நாற்காலியினின்றும் எழுந்தபடி கண்ணைச் சிமிட்டினார்.

"சொன்ன மாதிரியே வந்துட்டியே...?"

மௌனமாய் நின்றாள்.

"உள்ளே போகலாமா...?"

"ஸ... ஸார்..."

"என்னம்மா...?"

"எ... எனக்கு இந்த தண்டனை அவசியம்தானா?"

"என்ன சொன்னே? தண்டனையா? சரியா போச்சு. இது எனக்கும் உனக்கும் உள்ள அக்ரிமெண்ட். நட உள்ளே..."

சுபத்ரா சுற்றும் முற்றும் பார்த்தாள். அவள் அப்படி பார்ப்பதைக் கண்ட சண்முகராஜன் சிரித்தார்.

"எந்த திசையிலும் யாரும் இருக்க

மாட்டாங்க. வீட்ல இருந்த ஒரே வேலைக்
காரனையும் டவுனுக்கு அனுப்பி விட்டேன்.
சாயந்தரம் ஆறு மணி வரைக்கும் யாரும்
வரமாட்டாங்க. தைரியமா உள்ளே வா."

சொல்லிவிட்டு அவர் உள்ளே போக -
சுபத்ரா தயங்கி தயங்கி அவரைத்
தொடர்ந்தாள்.

"கதவை நீயே சாத்தி தாழ்ப்பாள் போட்டுடு
சுபத்ரா. எல்லாம் உன்னோட கையாலேயே
நடக்கட்டும்."

"..."

"எதுக்கும் பயப்படாதே. நான் உன்னைத்
தொட்டுக்கப் போகிற விஷயம் ஊர்ல
எவனுக்கும் தெரியப் போறதில்லை.
வாரத்துக்கு ரெண்டு தடவை நீ உன்னோட
கரஸ்பாண்டென்டைப் பார்க்க வர்றே.
அவ்வளவுதான்."

"...."

"ஊரு உலகத்துல நடக்காதது எதுவும்
இப்போ நடந்துடப் போறதில்லை. மானேஜர்
டைப்பிஸ்டை தொடறதும், மேஸ்திரி
சித்தாளைத் தொடறதும், கரஸ்பாண்டென்ட்
டீச்சரைத் தொடறதும் சகஜம். வா... இப்படி
வந்து என் பக்கத்துல உட்கார்."

பேசி முடித்த சண்முகராஜனின் முகம்
சட்டென்று ஒரு விநாடி மாறியது. நெற்றி
வியர்த்தது.

'நெஞ்சுக்குள் அதென்ன வலி...?'

'ஊசியை சொருகி இழுத்த மாதிரி...'

யோசிப்பதற்குள் வலி அதிகரித்து - பல
மடங்காய் பெருகி சண்முகராஜன் எ



முயன்று ஒருக்களித்து விழுந்தார்.

அவர்க்கு புரிந்து போயிற்று.

'இது ஹார்ட் அட்டாக்.'

'இரண்டு வருஷத்திற்கு முன்னால் ஒரு
டவை எட்டிப் பார்த்து விட்டுப் போன அதே
இருதய வலி.'

"ம்... மா... ஆ..."

"ஸார்... ஸார்."

அவராருகே ஓடினாள் சுபத்ரா.
ண்முகராஜன் வியர்த்த முகமாய்
ல்லாந்தார். இரண்டு கைகளாலும்
நெஞ்சைப் பற்றிக் கொண்டு உடம்பை ஒரு
திரியாய் வெட்டினார்.

"ஸா ... ஸார்... உங்களுக்கு என்ன
ண்ணுது?"

"அ... அந்த அலமாரியில ஒரு மாத்... திரை
டை இ... இ.... இருக்கு... போ... போய்
ா... கொண்டா..."

சுபத்ரா அலமாரியை நோக்கி ஓடினாள்.
தன் கதவைத் திறந்து வைத்துக் கொண்டு
த்திரைப் பட்டையை தேடி எடுத்து
மையலறைக்கு ஓடிப்போய் ஒரு டம்ளர்
ண்ணீரோடு சண்முகராஜனை
நருங்கினாள்.

"ஸா... ஸார்... ஸார்... மாத்திரை..."

அவர் வாயைத் திறந்தார். சுபத்ரா
த்திரையை வாய்க்குள் போட்டு தண்ணீரை
ற்றினாள்.

"க்ளக்..."

மாத்திரை தண்ணீரோடு சேர்த்து உள்ளே
பான அதே விநாடி - அவருடைய கண்கள்

சட்டென்று நிலைத்துப் போயிற்று. தலை
ஒருபக்கமாய் சரிய கடைவாயில் தண்ணி
வடிந்தது.

## 14

**உன்னுடைய கௌரவம் உன் நாக்கின் நுனியில் இருக்கிறது.**

**ச**ண்முகராஜன் வீட்டில் நடுக்கூடத்தில்
கிடத்தப்பட்டு - ரோஜா மாலைகளால் சூழ்
திருக்க - வீட்டுக்கு உள்ளேயும், வெளியேயு
ஊரே கூடியிருந்தது. டீச்சர்களோடு ஒதுக்கு
புறமாய் உட்கார்ந்திருந்த சுபத்ராவுக்
சண்முகராஜனின் மரணம் பிரமிப்பா
இருந்தது.

'கடவுளாய்ப் பார்த்து கொடுத்
தண்டனையா அது...?'

'இல்லை... காக்கை உட்கார பனம்பழ
விழுந்த மாதிரி என்று சொல்வதைப்போல்
என்னைத் தொடப் போகிற நேரத்தி
அவர்க்கு ஹார்ட் அட்டாக் வந்து விட்டதா

'எப்படியோ...! ஒரு இக்கட்டிலிருந்
தப்பியாயிற்று.'

யோசனையில் இருந்தவளை அந்தக் கு
கலைத்தது.

"அதோ அவங்கதான் சுபத்ரா டீச்சர்."
நிமிர்ந்தாள்.

உள்ளூர் போலீஸ் இன்ஸ்பெக்



மஃப்டியில் தெரிய - பக்கத்தில் ஒரு ஆள் நின்றிருந்தான். இன்ஸ்பெக்டர் அவளை நோக்கி வந்தார்.

"நீங்க மிஸ் சுபத்ரா?"

"ஆமா..."

"சண்முகராஜனோட உயிர் பிரியறப்போ நீங்கதான்... பக்கத்தில் இருந்ததா பேசிக்கறாங்க... உண்மையா...?"

"ஆமா..."

"அவரை எதுக்காக பார்க்க வந்தீங்கன்னு சொல்ல முடியுமா...?"

சுபத்ரா சில விநாடிகள் தயங்கி விட்டு தொடர்ந்தாள். "பள்ளிக்கூட ஆண்டு விழாவைப் பத்தி பேசறதுக்காக என்னை வரச் சொல்லியிருந்தார். அவர் சொன்ன நேரத்துக்கு நானும் வந்தேன். 'வாம்மா'ன்னு சொன்னவர், திடீர்னு நெஞ்சைப் பிடிச்சுக்கிட்டார். 'அலமாரியில் மாத்திரை இருக்கு. கொண்டு வா'ன்னார். நானும் ஓடிப்போய் மாத்திரையையும் தண்ணியையும் கொண்டு வந்து குடுத்து மாத்திரையை விழுங்க வச்சேன். மாத்திரையை விழுங்கி ஒரு வாய் தண்ணியை குடிச்சிட்டிருக்கும் போதே அவர் உயிர் பிரிஞ்சுட்டது. நான் உடனே ப்ரைம் ஹெல்த் சென்டர்க்கு போய் - டாக்டரைக் கூட்டிக்கிட்டு வந்தேன். அவரும் பார்த்துட்டு 'ஹார்ட் அட்டாக். உயிர் பிரிஞ்சுருச்சு'ன்னு சொன்னார்."

"நீங்க சொன்னதை ஒரு ஸ்டேட்மெண்ட்டா எழுதிக் குடுத்துடுங்க.... மிஸ் சுபத்ரா."

''எதுக்கு?''

''சண்முகராஜனோட மரணம் இயற்கையானதா... மற்றவர்களாலே உண்டாக்கப்பட்டதான்னு அவரோட மைத்துனர்க்கு சந்தேகம் வந்திருக்கு. சண்முகராஜனுக்கு இந்த ஊர்ல எதிரிகள் இருக்காங்கங்கறது அவரோட எண்ணம்.''

சுபத்ராவுக்கு நெற்றி வியர்த்தது.

''அப்படீன்னா இது மர்டர்ன்னு சொல்ல வர்றீங்களா?''

''அதை முடிவு பண்ணப் போறது போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்தான். நீங்க உங்க ஸ்டேட்மெண்ட்டை விளக்கமா எழுதிக் குடுங்க.''

''எப்ப வேணும்...?''

''இப்பவே...!''

''வாங்க... எழுதித் தர்றேன்.''

சுபத்ரா நடந்தாள்.

## 15

**மனிதன் கல்லைவிட கடினமானவன். ரோஜா மலரை விட மென்மையானவன்.**

சண்முகராஜனின் போஸ்ட்மார்ட்டத்தை முடித்துக் கொண்டு - டாக்டர் அறை னின்றும் வெளிப்பட்டதும் - இன்ஸ்பெக்ட நெருங்கினார்.



''டாக்டர்...''

''சண்முகராஜனின் மரணம் இயற்கையானதில்லை... அவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்.''

''இன் வாட்வே டாக்டர்...?''

''டெத் காஸ்ட் பை பாய்ஸன்.''

''எப்படி டாக்டர்...?''

''அங்கேதான் கொஞ்சம் குழப்பம். இஞ்செக்ஷன் போடப்பட்டதுக்கான மார்க் எதுவும் தட்டுப்படவில்லை. இன்டெஸ்டைன் பார்ட்ஸை கலக்ட் பண்ணி 'லேப்'புக்கு அனுப்பி ரிப்போர்ட் வாங்கினாத்தான் தெரியும்.''

இன்ஸ்பெக்டர் ஸ்டேஷனுக்கு திரும்பும் வழியில் சண்முகராஜனின் வீட்டுக்குப் போய் வேலையாளை அழைத்துக் கொண்டு ஒதுக்குப்புறமாய் போனார்.

''உம்பேரு மலைச்சாமிதானே?''

''ஆமாங்க...''

''சண்முகராஜன் நேத்திக்கு உன்னை டவுனுக்கு அனுப்பும் போது மணி எத்தனை?''

''ரெண்டு மணி இருக்குமுங்க.''

''உன்னை எதுக்காக டவுனுக்கு அனுப்பிச்சாரு?''

''வேப்பம் புண்ணாக்கு வாங்கிட்டு வரச் சொன்னாருங்க!''

''வழக்கமா நீதான் டவுனுக்கு போவியா...?''

''இல்லீங்க... தோப்பை குத்தகைக்கு எடுத்திருக்கிற ஆள்தான் போவான்ங்க...''

''பின்னே உன்னைய ஏன் அனுப்பினாரு...?''

''எனக்கு தெரியல்லீங்க! ஆனா...''

''சொல்லு...''

''அவர் யாரையோ எதிர்பார்த்து காத்துக்கிட்டிருந்த மாதிரிதான் எனக்கு தோணிச்சுங்க. 'வேப்பம் புண்ணாக்கை வாங்கிகிட்டு ஆறு மணிக்கு மேல டவுனிலிருந்து புறப்பட்டு வந்தா போதும்'னு சொன்னாருங்க.''

இன்ஸ்பெக்டர் மோவாயைத் தேய்த்தார்.

'சண்முகராஜன் எதிர்பார்த்து காத்துட்டிருந்தது டீச்சர் சுபத்ராவுக்காக இருக்குமோ?'

''மலைச்சாமி...''

''அய்யா...''

''சண்முகராஜன் பொம்பளை விஷயத்துல எப்படி...?''

''அந்த மாதிரியான கசமுசாவெல்லாம் அவர்கிட்ட இல்லீங்க. எந்த பொண்ணையும் அவர் வக்கிரமா பார்த்து நான் பார்த்தது இல்லீங்க.''

''டீச்சர் சுபத்ரா சண்முகராஜனை பாக்கிறதுக்கு அடிக்கடி வருவாங்களா?''

''அடிக்கடி வராதுங்க. போன ரெண்டு வாரமாத்தான் அய்யாவைப் பார்க்கிறதுக்கு நாலைஞ்சுதபா வந்துச்சுங்க.''

''சண்முகராஜன் சுபத்ராகிட்டே வெச்சுகிட்ட பேச்சு வார்த்தையெல்லாம் எப்படி?''



''அதுல ஒரு விகல்பமும் இல்லீங்க. தான் பெத்த பொண்ணுகிட்ட பேசற மாதிரிதான் அவர் பேசினாரு.''

''சரி... நேத்து காலையிலிருந்து சண்முக ராஜனைப் பார்க்கிறதுக்காக யார் யார் வந்தாங்கன்னு யோசிச்சு சொல்லு.''

மலைச்சாமி பின்னந்தலையைச் சொறிந் தான். அரை நிமிஷ யோசனைக்குப்பின் சொன்னான். ''ஆங்... சுபத்ரா டீச்சரோட தம்பி பசுபதி, அய்யாவை பார்க்க வந்தான்.''

''எதுக்கு...?''

''தெரியலைங்க... நான் பார்த்துட்டு பின்பக்கம் போயிட்டேன்.''

''சரி... அப்புறம் வேற யார் வந்தாங்க...?''

''அப்புறம்... நான் டவுனுக்கு புறப்பட்டு போகிற வரைக்கும் யாரும் வரல்லீங்க.''

''யோசிச்சு சொல்லு...''

''தீர்க்கமாதாங்க சொல்றேன். பகல் சாப்பாடு வரைக்கும் அய்யா ரூம்ல படுத்துக்கிட்டு புஸ்தகம் படிச்சிட்டிருந்தாரு.''

''நேத்து மத்தியானம் அவர் என்ன சாப்பிட்டாரு?''

''கோழியடிச்சு குழம்பு வெய்க்கச் சொன்னாரு... வெச்சேன்... பிரியமா சாப்பிட்டாரு.''

''சுபத்ராவோட தம்பி பசுபதி வந்ததா சொன்னியே...? எத்தனை மணிக்கு வந்தான்?''

''எட்டு மணி இருக்குமுங்க...''

## 16

> **நாற்பது வயது - இளமையின் முதுமை.**
> **ஐம்பது வயது - முதுமையின் இளமை.**

இரவு எட்டு மணி.

''நமக்கு உதவி பண்ணின மனுஷன்
இப்படி திடீர்ன்னு போயிட்டாரே...'' ராஜம்
புலம்ப - சிவசாமி பெருமூச்சு விட்டார்.

''என்ன செய்யறது...? யார் யார்க்கு எப்ப
விதிச்சிருக்கோ அப்ப பாடை ஏறித்தானே
ஆகணும்?''

சுபத்ராவும் - கலாவதியும் சமைய
லறையில் வேலையாய் இருக்க வாசற்பக்கம்
பைக் சத்தம் கேட்டது.

சுபத்ரா எட்டிப் பார்க்க -

இன்ஸ்பெக்டர்.

ஈரக்கையை சேலையில் துடைத்து
கொண்டே வேக வேகமாய் வெளிப்பட்டாள்
பைக்கை ஸ்டாண்டிட்டு நிறுத்தி விட்டு
இன்ஸ்பெக்டர் உள்ளே வந்தார். சிவசாமியும்
ராஜமும் கலவரமாய் எழுந்தார்கள்.

சுபத்ரா துணிச்சலை வரவழைத்து
கொண்டு ''எஸ்'' என்றாள்.

''உங்க பிரதர் பசுபதி வீட்
இல்லையா...?''

''வெளியே போயிருக்கான்.''

''வெளியேன்னா எங்கே?''



''டவுன்ல அவன் ஃப்ரண்ட் யாரையோ பார்க்கப் போயிருக்கான். என்ன விஷயம் இன்ஸ்பெக்டர்?''

''பசுபதிகிட்டயிருந்து ஒரு இன்ஃபர்மேஷன் வேணும்.''

''என்ன... இன்ஃபர்மேஷன்?''

''நேத்து காலையில எட்டு மணிக்கு சண்முகராஜனை பசுபதி போய் சந்திச்சிருக்கான்.''

''ஆமா...''

''எதுக்கு...?''

''ஆசீர்வாதம் வாங்கறதுக்கு...''

''ஆசீர்வாதமா...?''

''எஸ்... பசுபதிக்கு சண்முகராஜன்தான் ஒரு நல்ல வேலையை ஏற்பாடு பண்ணியிருந்தார். நேத்திக்குத்தான் முதல் நாளா வேலைக்குப் போனான். வேலைக்கு போறதுக்கு முந்தி - வேலையை வாங்கிக் குடுத்த அவர்கிட்ட ஆசீர்வாதம் வாங்கிக்கறதுதானே முறை...''

''பசுபதியைப்பத்தி நான் வெளியே விசாரிச்ச அளவில்... முரடன், முன்கோபக்காரன்னு சொன்னாங்க. உண்மையா...?''

''அவனுக்கு முன்கோபம் வர்றதுண்டு. ஆனா முரடனில்லை.''

''இந்த வீட்ல அவனோட ரூம் எது...?''

''எதுக்கு கேக்கறீங்க?''

''செக் பண்ணணும்...''

''காரணம்...?''

''சண்முகராஜனோட மரணம் 'இயற்கையானது அல்ல'ன்னு போஸ்ட்

மார்ட்டம் ரிப்போர்ட் சொல்லுது. நேத்திக்கு காலையிலிருந்து மத்தியானம் வரைக்கும் அவர் வீட்டுக்கு யார் யார் போனாங்கன்னு ஒரு லிஸ்ட் எடுத்து அந்த வீடுகளையெல்லாம் சோதனை பண்ணிட்டு வர்றோம். அந்த வகையில் பசுபதியோட ரூமையும் சோதனை பண்ணனும்.''

சிவசாமி குறுக்கிட்டார். ''இன்ஸ்பெக்டர்! அது தான் பசுபதியோட ரூம். நீங்க தாராளமா போய் சோதனை பண்ணிக்கலாம். சண்முகராஜன் இந்த வீட்டைப் பொறுத்த வரைக்கும்... ஒரு தெய்வம் மாதிரி! எங்க வீட்டிலேயே ஒரு துக்க காரியம் நடந்துட்ட மாதிரி நாங்க... அவரோட மரணத்துக்காக புலம்பிட்டிருக்கோம். அவரோட மரணத்துக்கு பசுபதியோ... எங்க வீட்ல இருக்கிறவங்களோ காரணமாக இருக்க முடியாது.''

இன்ஸ்பெக்டர் பசுபதியின் அறைக்குள் நுழைந்தார். கயிற்றுக் கட்டில், ஒரு மர பீரோ, ஹேங்கர்களில் தொங்கும் பேண்ட், சர்ட், லுங்கி வகையறாக்கள், மேஜையின் மேல் சில புத்தகங்கள்.

மர பீரோவைத் திறந்தார் இன்ஸ்பெக்டர். அடைசலாய் துணிமணிகள், புத்தகங்கள். கிளறினார்.

எல்லாமே ரேடியோ என்ஜினீரிங் புக்ஸ். சில மாத நாவல்கள், சொற்பமாய் தெரிந்தன.

மேஜையின் டிராயரை இழுத்தார் இன்ஸ்பெக்டர். சிறிது சிரமமாய் வெளியே வந்தது. உள்ளே -

நிறைய இன்லேண்ட் கடிதங்கள்.



ஒன்றிரண்டைப் படித்துப் பார்த்தார். நண்பர்களிடமிருந்து வந்தவை. வேலை கிடைக்காத காரணத்தினால் வீட்டில் நேரிடுகிற அவமானங்களை அதில் கொட்டியிருந்தார்கள்.

கடிதங்களை எடுத்துவிட்டு - உள்ளே பார்த்தார்.

கர்ச்சீப்பால் ஏதோ சுற்றப்பட்டு தெரிந்தது. வெளியே எடுத்தார். கர்ச்சீப்பை பிரிக்க உள்ளே சுண்டுவிரல் சைஸில் ஒரு பாட்டில்.

இன்ஸ்பெக்டர் கண்மட்டத்துக்கு மேல் வைத்து உயர்த்திப் பார்த்தார்.

பாட்டிலுக்குள் ஏதோ திரவம் சலசலத்தது. பின்பக்கம் நின்றிருந்த சுபத்ராவை திரும்பிப் பார்த்தார் இன்ஸ்பெக்டர்.

''என்ன இது...?''

''தெரியலை...''

''உங்களுக்கு வேணுமின்னா தெரியாமல் இருக்கலாம். இது ஒரு வகை சயனைட் பாட்டில்.''

சுபத்ரா உறைந்து போனாள்.

## 17

**வீழ்வது வெட்கமல்ல, வீழ்ந்து கிடப்பது தான் வெட்ககரமானது.**

இன்ஸ்பெக்டர் புன்னகைத்தார்.

''சண்முகராஜனோட மரணத்துக்கு

காரணம் அவர் உடம்பில் கலந்திருக்கிற விஷம்தான்னு டாக்டர் சொல்லியிருக்கார். உங்க தம்பி பசுபதியோட மேஜை ட்ராயர்ல இந்த விஷ பாட்டில். லிங்க் பண்ணிப் பாருங்க மிஸ் சுபத்ரா."

சுபத்ரா என்ன பேசுவது என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருக்கும் போதே வாசல் பக்கம் நடைச் சத்தம் கேட்டது.

எட்டிப் பார்த்தாள்.

பசுபதி சைக்கிளை நிறுத்தி விட்டு உள்ளே வந்து கொண்டிருந்தான். சுபத்ரா படபடப்பும் பயமுமாய் கத்தினாள்.

"டேய்... பசுபதி..."

"என்னக்கா?" அவன் குழப்பமாய் வந்து அறைக்குள் நுழைந்து அங்கிருந்த இன்ஸ்பெக்டரைப் பார்த்ததும் திகைத்தான்.

"ஸ... ஸார்..."

இன்ஸ்பெக்டர் தன், புன்னகையின் பரப்பளவை பெரிதாக்கினார். "பசுபதி சண்முகராஜன் மேல உனக்கு என்ன கோபம்...?"

"கோபமா...? என்ன ஸார் சொல்றீங்க?"

"அவர்க்கு விஷம் கொடுத்தது தானே...?"

"ஸார்... நீங்க பேசறது எனக்கு அதிர்ச்சியா இருக்கு. படிச்சுட்டு வேலை கிடைக்காம நடை பிணமா சுத்திக்கிட்டிருந்த எனக்கு ஒரு நல்ல வேலையை வாங்கிக் கொடுத்தவர் அவர். அவரை நான் எதுக்காக விஷம் கொடுத்துக் கொல்லணும்?"



"அப்படீன்னா... இது என்ன...?"

கையில் வைத்திருந்த அந்தச் சிறிய சயனைட் பாட்டிலைக் காட்டினார் இன்ஸ்பெக்டர். பசுபதியின் முகம் வெளிறிப் போயிற்று.

"ஸ... ஸார்... இது உங்களுக்கு எப்படி...?"

"கிடைச்சதுன்னு கேக்கறியா...? உன்னோட மேஜை ட்ராயரைக் கிளறிப் பார்த்தேன். கிடைச்சுது. இது சயனைட் பாய்ஸன்தானே?"

"ஆ... ஆமா ஸார்..."

"சண்முகராஜனைக் கொலை பண்ண இந்த சயனைட்டைத்தான் உபயோகப்படுத்தியிருக்கே. இல்லையா...?"

"நோ... ஸார்... யூ... ஆர் ராங்க்."

"பின்னே...?"

"இது என்னோட முடிவை நானே தேடிக்கிறதுக்காக பதினைஞ்சு நாளைக்கு முன்னாடி வாங்கி வெச்ச பாய்ஸன்."

"என்ன உளர்றே...?"

"உளறலை ஸார்... வேலை கிடைக்காத கொடுமையை அனுபவிக்கிறதைக் காட்டிலும் இறந்து போறதே மேல்ன்னு முடிவு கட்டி ரெண்டு வாரத்துக்கு முந்தி நான் வாங்கி வச்ச பாய்ஸன் இது. இந்த மாசத்துக்குள்ளே வேலை கிடைக்கலைன்னா... வடநாட்டுப் பக்கம் போய் ஆர்மியில் சேர்ந்துடறது... இல்லேன்னா... தற்கொலை பண்ணிக்க வேண்டியதுங்கற ரெண்டு முடிவில் இருந்தேன். அந்த ரெண்டுக்குமே அவசியமில்லாதபடி சண்முகராஜன் எனக்கு ஒரு நல்ல வேலையை வாங்கிக்

குடுத்துட்டார். வேலை கிடைச்ச சந்தோஷத்தில் மேஜை ட்ராயரில் இருந்த இந்த சயனைட்டை மறந்துட்டேன்.''

''உனக்கு இந்த சயனைட் பாட்டிலைக் கொடுத்தது யாரு...?''

''யாரும் கொடுக்கலை. எடுத்துட்டு வந்தேன்.''

''எடுத்துட்டு வந்தியா...? எங்கிருந்து...?''

''என் ஃப்ரெண்ட் கோவிந்தராஜ்ன்னு பேரு... அவன் ஒரு கெமிக்கல் கம்பெனியில் வேலைபார்த்திட்டிருக்கான். அவனைப் பார்க்கிறதுக்காக நான் அடிக்கடி அங்கே போவேன். ரெண்டு வாரத்துக்கு முந்தி கெமிக்கல் ஃபாக்டரியை அவன் சுத்திக் காட்டும் போது பாய்ஸன் செக்ஷனிலிருந்த இந்த பாட்டிலை அவனுக்குத் தெரியாமே எடுத்து வெச்சுக்கிட்டேன்.''

இன்ஸ்பெக்டர் தன்னைச் சுற்றிலும் இருந்த சிவசாமி, ராஜம், சுபத்ரா, கலாவதியை ஒருமுறை பார்த்து விட்டு தோள்களை குலுக்கினார்.

''பசுபதி சொல்றதை இப்ப நான் நம்பிக்கிறேன். ஆனா... சண்முகராஜனின் உடம்பில் உறைந்து போயிருக்கிற விஷமும் இந்த பாட்டிலில் இருக்கிற விஷமும் ஒரே வகையைச் சேர்ந்ததா இருந்தா... பசுபதியை நான் அரஸ்ட் பண்ண வேண்டியிருக்கும்.''

சுட்டு விரலைக் காட்டி எச்சரித்து விட்டு வாசலில் நின்றிருந்த பைக்கை நோக்கிப் போனார் இன்ஸ்பெக்டர்.



18

ஒரு மிகச் சிறிய பழமொழியிலிருந்து மிகப் பெரிய ஆறுதல் கிடைக்கலாம்.

கெமிக்கல் லாபரட்டரி.

சீஃப் டெக்னீஷியன் குருமூர்த்தி - இன்ஸ்பெக்டரிடம் ரிப்போர்ட்டை நீட்டினார். ''சண்முகராஜனின் இன்டஸ்டைன் பார்ட்ஸையும், இரைப்பையில் இருந்த உணவையும் - ரசாயன பரிசோதனைக்கு உட்படுத்திப் பார்த்த போது - அதில் விஷம் இருந்ததுக்கான ஸிம்ப்டம்ஸே இல்லை. ஆனால், அவருடைய சுவாசப்பைகளில் விஷத்தின் தாக்குதல் தெரிகிறது.''

''ஹூ... மீன்... லங்க்ஸ்...?''

''எஸ்... சுவாசப்பைகளில் படிந்துள்ள அந்த விஷம் சயனைட் வகையைச் சேராத விஷம். சயனைட் உடனடியாய் மரணத்தைக் கொடுக்கக் கூடியது. ஆனால், சண்முகராஜனின் உயிரைப் பறித்துக் கொண்ட விஷத்திற்கு அந்த தன்மையில்லை. கிட்டத்தட்ட ஒரு நாள் பூராவும் நுரையீரல்களை கொஞ்சம் கொஞ்சமாய் தாக்கி - பின் திடீரென்று ஒரு ஹார்ட் அட்டாக்கைப் போல் மரணத்தை உண்டு பண்ணியிருக்கு. மே... பி... மினரல் பாய்ஸன்.''

"இந்த பாய்ஸன் சண்முகராஜனுக்கு எந்த வகையில் கொடுக்கப்பட்டிருக்கலாம்னு நினைக்கறீங்க மிஸ்டர் குருமூர்த்தி?"

"அவருடைய மூக்கின் வழியாக செலுத்தப்பட்டிருக்கணும்."

"யூ... மீன்...?"

"சண்முகராஜன் 'பொடி' போடுகிறவராக இருந்தால், இந்த பாய்சன் அதில் கலந்து அவர் சுவாசப்பைகளுக்கு போயிருக்கலாம்."

இன்ஸ்பெக்டர் ரிப்போர்ட்டோடு எழுந்து கொண்டார். வழக்கில் ஒரு சின்ன பிடி கிடைத்துவிட்ட சந்தோஷம் அவர் முகத்தில் தெரிந்தது.

## 19

> **உங்கள் எதிரிகளை தாராளமாக மன்னியுங்கள். உண்மையில் உங்கள் மன்னிப்பை விட அவர்களை உறுத்தக்கூடியது வேறு எதுவும் இல்லை.**

மூன்று நாள் விசாரணைக்குப் பின் போலீஸ் கமிஷனருக்கு முன்பாய் **'சண்முகராஜன் கொலை'** சம்பந்தப்பட்ட ஃபைல்களோடு நின்றிருந்தார் இன்ஸ்பெக்டர். கமிஷனர் பேப்பர் வெயிட்டை உருட்டிக் கொண்டே கேட்டார்.

"சண்முகராஜனின் மரணத்துக்கு அவரே



காரணமா? எப்படி...?"

"மூக்குப் பொடி போடுகிற பழக்கம் இருக்கிற அவர்... அதிக உற்சாகமும் போதையும் தரக்கூடிய... ஒரு வகை மூக்குப் பொடியை கடந்த ஒரு மாத காலமா உபயோகிச்சு வந்திருக்கார் ஸார்... அந்த மூக்குப் பொடியை அளவா பயன்படுத்தினா... எந்தக் கெடுதலும் இல்லையாம். அளவுக்கு மீறி உபயோகப்படுத்தினா... அது பாய்சனா மாறி நுரையீரல்களை பாதிக்கக் கூடிய அபாயம் இருக்காம்..."

"மூக்குப் பொடியை டெஸ்ட் பண்ணீங்களா...?"

"ஹியர் ஈஸ்... த... ரிப்போர்ட் ஸார்... நேஷனல் டுபாக்கோ ரிசர்ச் லாபிலிருந்து... ரிப்போர்ட் வாங்கப்பட்டிருக்கு..."

கமிஷனர் வாங்கிப் பார்த்தார்.

ரிப்போர்ட் சுருக்கமாய் - சண்முகராஜன் இறந்த சரித்திரத்தை சொல்லியது. **"இந்த ஸ்நஃப் பவுடரை ஒருவகை போதை மருந்து என்றே சொல்லலாம். அண்மைக் காலத்தில் தான்... இது தமிழ் நாட்டுக்குள் ஊடுருவி இருக்கிறது. சட்ட விரோதமான இந்த மூக்குப் பொடியில் ஓபியம் (OPIUM) அபின் - சில ரசாயன பொருள்களோடு கலந்துள்ளது. இதை அளவாகப் பயன்படுத்தினால் ஒரு சுகமான போதை கிடைக்கும். அளவுக்கு மீறினால் அதுவே நஞ்சாக மாறி - நுரையீரல்களை ஸ்தம்பிக்க வைத்து - மரணத்தைக் கொடுக்கும்..."**

கமிஷனர் நிமிர்ந்தார். "சண்முகராஜனுக்கு

இந்த மூக்குப் பொடியை சப்ளை பண்ணினது யாரு...?''

''அது சம்பந்தமான விசாரணையைத்தான் பண்ணிக்கிட்டு இருக்கேன் ஸார்''

''வீட்டு வேலைக்காரனை விசாரிச்சீங்களா?''

''விசாரிச்சேன் ஸார்''

''என்ன சொன்னான்...?''

''கடந்த ஒரு வருஷமாத்தான் சண்முகராஜனுக்கு மூக்குப் பொடி போடற பழக்கமாம். அதுவும்... யாரும் எதிரில் இருந்தா போட மாட்டாராம். வீட்டுக்குள்ள மறைவாகத்தான் போய் போடுவாராம்... பொடியை அவர்க்கு யார் சப்ளை பண்றாங்கங்கிற விபரம் அவனுக்குத் தெரியலை. லாக்கப்புக்கு கொண்டு போய் அடிச்சு அடிச்சுப் பார்த்தோம்...''

''சரி... இந்த கேஸை... எப்படி ஹேண்டில் பண்ணலாம்...?''

''ஆக்சுவலா இது மர்டர் இல்லை ஸார்... இது ஒரு வகையான தற்கொலை... போதைக்காக ஸ்நஃப் பவுடரை அளவுக்கதிகமா உபயோகிச்சதுனால... சண்முகராஜன் இறந்திருக்கார். ஸோ இந்த கேஸை போதை மருந்து தடுப்பு பிரிவு போலீஸ் துறைக்கு மாற்ற வேண்டும் ஸார்...''

''என்னோட முடிவும் அதுதான்... ஃபைல்களை குடுத்துட்டு போங்க... நான் இந்த கேஸை டிரக்ஸ் கண்ட்ரோலிங் செக்ஷனுக்கு ஹேண்ட் ஓவர் பண்ணிடறேன்...''

''தாங்க்யூ... ஸார்...''



## 20

**ஆடுகளின் ஒற்றுமை சிங்கத்தை பசியாக படுக்க வைத்திருக்கிறது.**

மாலை ஆறு மணி.

சுபத்ரா தேங்காய், பழம், பூ நிரம்பிய கூடையோடு அறையினின்றும் வெளிப்பட்டு - மாவாட்டிக் கொண்டிருந்த ராஜத்தைக் கூப்பிட்டாள்.

''அம்மா...''

''என்னடி....?''

''நான் அங்காளம்மன் கோயிலுக்கு போய் விளக்கேத்திட்டு வர்றேன்...''

''பூசாரி இல்லாத கோய்லு... சீக்கிரமா வந்துடு... இருட்டு மளமளன்னு வந்துடும்...''

''ம்... ம்...''

சுபத்ரா தலையாட்டிவிட்டு வெளியே வந்தாள். பத்து நிமிஷ நடையில் பெரியம்மிணி தோட்டத்தை தாண்டி குமரன் குன்று அடிவாரத்தில் கற்குழை வேலிக்கு நடுவே பாறைகள் சூழ்ந்திருந்த அந்த அங்காளம்மன் கோயிலைத் தொட்டாள். சூரியன் மலைக்குப் பின்னால் போயிருக்க சுற்றுப்புறம் இருட்டிக் கொண்டிருந்தது.

ஆள் நடமாட்டம் அறவே இல்லை.

கோயிலை நெருங்கியவள் சட்டென்று நின்றாள்.

அந்த பெரிய பாறைக்கு பின்னாலிருந்த ஒரு ஆணின் குரலும். பெண்ணின் குரலும் துல்லியமாக வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

சுபத்ரா பாறையை நெருங்கி உன்னிப்பாய் பேச்சை செவிமடுக்க, அவர்கள் யார் என்பது புரிந்தது.

ஸ்கூல் பிஸிகல் எஜுகேஷன் இன்ஸ்ட்ரக்டர் கணேஷும் செகண்ட்ரி கிளாஸ்களில் வகுப்பு எடுக்கும் புதிதாய் சேர்ந்த டீச்சர் லலிதாவும். லலிதா கேட்டுக் கொண்டிருந்தாள். கணேஷ் சிரித்தான்.

''அப்புறம் என்ன...? கேஸ் முட்டைகோஸ்தான். சண்முகராஜன் கேஸ் போதை மருந்து தடுப்பு அண்டு கண்காணிப்புப் பிரிவுக்கு போயிடுச்சு.''

''அவங்க மூணு நாலு மாசம் கழிச்சு இந்த கேஸை மறுபடியும் ஹேண்டில் பண்ண மாட்டாங்களே...?''

''மாட்டாங்க. பரண்மேலே தூக்கி எறிஞ்ச கேஸ் இது.''

''இந்த பதினைஞ்சு நாளா நான் ரொம்பவும் பயந்து போயிட்டேன்.''

''எதுக்காக பயம்...?''

கரஸ்பாண்டெண்ட் சண்முகராஜனோட மூக்குப் பொடி டப்பியில் நீங்க பாய்ஸனைக் கலந்த விஷயம் போலீசுக்கு தெரிஞ்சுடு மோன்னுதான்...''

''எப்படி தெரியும்...? அவர் ஏற்கெனவே போதை மருந்து கலந்த மூக்குப் பொடியை உபயோகிச்சிட்டிருக்கார். அதுல ரெண்டு



சிட்டிகை மினரல் பாய்ஸன் விட்டா யார்க்கு தெரியும். சாவும் உடனடியா வராது. நிதானமாகத்தான் வரும். நா பட்ட ஒரேயொரு கஷ்டம்... கரஸ்பாண்டெண்ட் வீட்ல இல்லாத நேரம் போய் அவர்க்காக காத்திட்டிருக்கிற மாதிரி நடிச்சு - வேலைக்காரன் மலைச்சாமி ஏமாந்த நேரமா பார்த்து பொடி டப்பியில் பாய்ஸனைக் கலந்ததுதான்.

இந்த விவகாரத்துல சுபத்ராவும், அவளோட தம்பியும் எங்கே மாட்டிக்கு வாங்களோன்னு பயந்துட்டிருந்தேன்... நல்லவேளையா அவங்களும் இதிலிருந்து 'ஃப்ரீ' ஆயிட்டாங்க...''

கணேஷ் சிரித்தான் ''என்னைப் பொறுத்த வரைக்கும் நான் பண்ணினது கொலையில்லை, சண்முகராஜனை தண்டிச்சிருக்கேன்.

''எனக்கு மனைவியாகப் போகிற உன்னை அவர் படுக்கைக்கு கூப்பிட்டார். படுக்கைக்கு வரலைன்னா... உத்யோகத்துக்கு வேட்டு வைப்பேன்னு சொன்னார். குடும்பத்தையே தற்கொலை பண்ணிக்க வெப்பேன்னு சொன்னார். அப்படி சொல்ற அந்த விஷ ஐந்துவை விட்டு வைக்கலாமா...? விஷத்துக்கு விஷம்தான் முறிவுன்னு சொல்லுவாங்க... அந்த முறிவை இப்ப குடுத்துட்டேன்...''

''கரஸ்பாண்டெண்ட் செத்ததுமே... அந்த கிராமமே சுத்தமாயிட்ட மாதிரி ஒரு எண்ணம்...''

''சரி... கிளம்பலாமா...?''

''அதுக்குள்ள அவசரமா...?''

''நான் டவுனுக்கு போகணும் லலிதா...''

''எதுக்கு...?''

''என்னோட பிரதர்க்கு போன் பண்ணனும்...''

''ஏன்?''

''சுபத்ராவை கல்யாணம் பண்ணிக்கப் போகிற விஷயம்தான்... சுபத்ரா ஒத்துக் கலை... வேற இடத்துல பெண் பார்க்கச் சொல்லணும்...''

''வேண்டாமே...!''

கணேஷ் லலிதாவை ஆச்சர்யமாய் பார்த்தான்.

''நீயா பேசினே?''

''இல்லையே...''

''பின்னே... ஒரு குரல் கேட்டது...''

''நான் தான்''

பாறையின் மறைவிலிருந்து புன்னகையோடு வெளிப்பட்டாள் சுபத்ரா.

(முற்றும்)